பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 29 | வெள்ளிக்கிழமை | (13.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 238

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றி

# புலிகளின் தலைவர் பிரபாவுடன் நேரில் பேசுவதற்கு விரும்புகிறேன்



### சர்வதேச செய்தி ஊடகத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா செவ்வி

(நமது நிருபர்)



**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எதுவுமின்றி நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தவே விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வதேச செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் இனப்பிரச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவுக்கு உதவிய இருவர் விளக்கமறியலில்!

கருணா குழுவினருக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின்பேரில இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் ஐஸ்கிறீம் உற்பத்தி தொழிற்சாலையொன்றை நடத்தி வந்த ஏறாவூரைச் சேர்ந்த பரீட், அவரது உதவியாளரான பாவா தாஹீர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் சுமுது பிரேமச்சந்திர உத்தரவிட்டார்.

இவர்கள் இருவரும் மட்டு. - அம்பாறை விசேட தளபதி ரமேஸ் செல்லும்வழியில் கிளைமோர் குண்டை வெடிக்கச்செய்து கொலைசெய்ய திட்டமிட்ட கருணா அணியினர் மூவருக்குப் பாதுகாப்பு வழங்கி உதவி நல்கியிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக கைக்குண்டு ஒன்று வெடித்தமையால் ஒருவர் உயிரிழந்ததும், ஏனைய இருவரும் தப்பியோடி இருந்தமையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வனுடன் ஜப்பானியத் தூதுவர் நாளை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஹக்கி யூகுடா நாளை சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

### பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

2004/2005ம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை 150 ரூபா செலுத்தி தப்பால் மூலமும் மானியங்கள் ஆணைக்குழுவிலும், முகவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாமென மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 3ந் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

இதேவேளை விண்ணப்பப் படிவங்களை யாழ். நகரிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் நாளை பெற்றுக்கொள்ளலாம் என புத்தகசாலையின் முகாமையாளர் தெரிவித்தார். (ச)

## புங்குடுதீவு மக்கள் இன்று ஆர்ப்பாட்டம் -மறியற்போர்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட டாக்டர் கா.உமாபதி சிவம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் அடையாள மறியல் போராட்டம் என்பன இடம்பெறவுள்ளன.

கடந்த 14 வருடங்களாக இயங்காமல் இருந்த புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை பெரும் முயற்சியின் பயனாக கடந்த 20 நாட்களாக இயங்கிவந்த நிலையில், இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட புதிய வைத்தியர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது.

இதனைக் கண்டித்தே பாதிக்கப்பட்ட மக்கள் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணியாக புறப்பட்டு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப பணிமனைமுன் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (உ)

### ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

ஈ.பி.டி.பி. அமைப்பின் திருகோணமலை மாவட்ட இணை அமைப்பாளர் ரமணி கடந்த

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஹக்கி யூசூடா நாளை சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சி செல்லும் ஹக்கி யூசூடா தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து, ஜப்பானிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பேசவுள்ளார். (உ-க)

## ஞாயிற்றுக்கிழமை காலை தனியார் வகுப்புகளுக்கு தடை

(கொழும்பு)

ஞாயிற்றுக்கிழமைகளில் காலைவேளைகளில் தனியார் வகுப்புக்களை நடத்துவதினைத் தடைசெய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அனைத்து மதங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கு சமய வகுப்புகள் நடத்தப்படுவதால் மாணவர்களது சமயக் கல்வி பாதிக் கப்படுவதனால் ஞாயிற்றுக் கிழமைகளில் காலைநேர வகுப்புகள் நடத்தப்படுவது தடைசெய்யப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

தவறு காரணமாக கைக்குண்டு ஒன்று வெடித்தமையால் ஒருவர் உயிரிழந்ததும், ஏனைய இருவரும் தப்பியோடி இருந்தமையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சிங்கம் புத்தகசாலையில் நாளை பெற்றுக்கொள்ளலாம் என புத்தக சாலையின் முகாமையாளர் தெரிவித்தார். (ச)

நியமிக்கப்பட்ட புதிய வைத்தியர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணி


# கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இளம்பரிதியுடன் நேற்று முக்கிய சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு நேற்று மாலை 4 மணியளவில் பொற்பதி வீதியிலுள்ள அரிசியற்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது பல முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

✦ அரசாங்கத்தின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி யாழ். மாவட்டத்திலுள்ள வறிய மக்களை சென்றடையக்கூடிய வகையில் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.



✦ சிறுகைத்தொழில் முயற்சியை ஊக்குவித்தல்.

✦ முன்பள்ளி, விளையாட்டுத்துறை மற்றும் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு உதவும் வகையில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்குதல்.

✦ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி அம்புலன்ஸ் வண்டி வழங்குதல்.

✦ தீவுப்பகுதி மக்களின் குடிநீர் மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல்.

✦ விதவைப் பெண்களுக்கு கைத்தொழில் வாய்ப்பை முன்னுரிமை அடிப்படையில் வழங்குதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு மாணவர்களே!**
**உள்ளே!**
*சுந்தரின் 5ஆந் தர மாணவர்களுக்கான புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்*

(திருகோணமலை)

ஈ.பி.டி.பி. அமைப்பின் திருகோணமலை மாவட்ட இணை அமைப்பாளர் ரமணி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து ஈ.பி.டி.பி.அமைப்பினர் நேற்று திருகோணமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்காணிப்புக்குழு அலுவலகத்தின்பிரதான வாயிலுக்கு முன்பாக கொலையுண்ட ரமணியின் சடலம் வைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதேவேளை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டாக்ஸிற்றிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (த-121,08)

## அதாவுல்ல அணியுடன் அமீர் எம்.பி. இணைவு


மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி அமைச்சர் அதாவுல்லாவுடன் இணைந்து செயற்படவுள்ளதாக தெரியவருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும், அமீர் அலிக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்றுவருவதனாலேயே அவர் இம்முடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒலிம்பிக் இன்று கோலாகல ஆரம்பம்

தங்கம், வெள்ளி, வெண்கலம் ... இதற்காகத்தானே காத்திருந்தார்கள் உலகெங்கிலும் உள்ள விளையாட்டு ரசிகர்கள் ...? எதென்ஸ் ஒலிம்பிக் கோலாகலமாக இன்று தொடங்குகிறது. போட்டிகளுக்கான அனைத்து ஏற்



பாடுகளும் முழுமையாக முடிந்து விட்டன. இன்று பதக்கவேட்டை தொடங்குகிறது. கடலா- கடலையா?

தங்கம், வெள்ளி, வெண்கலம் - இந்த 3 வார்த்தைகள் தான், வரும் 29 ஆம் திகதி வரை உலகில் மிக அதிகம் உச்சரிக்கப்படுபவையாக் இருக்கும். 4 ஆண்டுகள் உலக விளையாட்டு இரசிகர்கள மிக ஆவலுடன் காத்திருந்த ஒலிம்பிக் போட்டிகள், அதன் தாய் மண்ணில், இன்று அமர்க்களமாகத் தொடங்குகிறது. பங்கேற்கும் வீரர், வீராங்கனைகள் ஒருபக்கம் ஒலிம்பிக் கிராமத்தை முற்றுகையிடுகிறார்கள் என்றால், மறுபுறம் ரசிகர்கள் கூட்டம் அலைகடல் போல. பாதுகாப்பு, தீவிரவாதிகள் அபாயம் இப்படி நிறையப் பிரச்சினைகள் முன்பு விவாதிக்கப்பட்டன. இப்போது அதையெல்லாம் சுத்தமாக மறந்து விட்டார்கள் ரசிகர்கள். அவர்களுக்கு இனி எல்லாமே விளையாட்டு மட்டும்தான். எதென்ஸ நகர வீதிகளில் ஒலிம்பிக் வளையம் பதித்த சட்டை போட்டுக்கொண்டு, பாதுகாப்புக் கெடுபிடிகளுக்குச் சற்றும் கவலை இல்லாமல் வட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றனர்.

சர்வதேச ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஜாக்ஸ் ரோகி தலைமையில் ஒரு குழு பம்பரமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் (தற்போதைய அதிபரின் அப்பா) பிரிட்டன் பிரதமர் டோனப்ளேயர், பிரான்ஸ் அதிபர் ஜாக்ஸ் சிராக் உட்பட பன்னாட்டு பிரதமர்கள், அதபர்கள், முக்கிய பிரமுகர்கள் இன்று வரப்போகின்றார்கள்.

அவர்களை அருமையாக வரவேற்று உபசரிக்க வேண்டும் பாதுகாப்புவழங்க வேண்டும். வீரர், வீராங்கனைகளுக்கு ஒரு குறையும் இல்லாமல் கவனிக்க வேண்டும். எந்தச் சர்ச்சையும் குளறுபடியும் வந்து விடவே கூடாது... இப்படி அவர்களுக்கு நிறையவேலை.

பயமேயில்லை. எதென்ஸ் நகரை நேற்றுமாலை சுற்றி வந்தபோது, ஒலிம்பிக் போட்டிக்கு ஆங்காங்கே எதிர்பபும்இருப்பதைக காணமுடிந்தது. கம்யூனிஸ்ட் அமைப்புகள் சில, 'இத்தனை கோடிகளைக் கொட்டி, விளையாட்டு நடத்தவேண்டுமா? இது அவசியம்தானா?' என்று கண்டனக் குரல் எழுப்பிக்கொண்டிருந்தன.

எதிர்ப்பும், ஆதரவும், மகிழ்ச்சியும், உற்சாகமும் கொண்ட ஒரு கலவையை எதென்ஸ் நகர வீதிகளில் பார்க்கமுடிகிறது. எல்லாம் சரி... என்ன செய்கிறார்கள் அங்கு இந்திய வீரர்கள்? 'கவலையே வேண்டாம். பதக்கத்துடன் திரும்புவோம்' என்கிறார் இந்திய ஒலிம்பிக் குழுத் தலைவர் ஹரிஷ் சர்மா. அவர் தவிர, லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, அஞ்சலி பகவத், அஞ்சு ஜார்ஜ், ஹாக்கி அணி வீரர்கள் அனைவருமே தன்னம்பிக்கையுடன் இந்த ஒலிம்பிக்கை அணுகுகிறார்கள். அதுபோதுமே! தன்னம்பிக்கைதானே வெற்றிக்கு முதல் படி!

உலகின் மிகப் பிரமாண்ட சொகுசுக் கப்பல் குயின்மேரி -2' பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம். அது இப்போது எதென்ஸில் தான் இருக்கிறது. ஒலிம்பிக் காணவரும் வி.ஐ.பி.கள் பாதுகாப்பாகத் தங்குவதற்காக நிறைய சொகுசுக்கபல்களை கிரிஸ அரசு வரவழைத் துள்ளது. இதுவரை 5 கப்பல்கள் (குயின் மேரியையும் சேர்த்து) வந்து விட்டன. இன்னும் 3 இன்று வந்து சேரும். மொத்தம் 10 ஆயிரத் துக்கும் அதிகமான விஜபிகள் இந்தக் கப் பல்களல்தங்கு வார்கள்.

குயின்மேரி - 2 கப்பலில் மொத் தம் ஆயிரத்து 310 சொகுசு



சாத்தியமான அனைத்து ஏற்பாடுகளையும்கிரீஸ் அரசு திறம்படச் செய திருக்கிறது. ஒலிம்பிக் ஏற்பாடுகள், பாதுகாப்புப் பணிகள் என அனைத்தும் திருப்திகரமாக இருக்கின்றன.

அமெரிக்கத் தாக்குதல், ஈராக் போர் என்று பல முக்கிய சம்ப

## தங்கம், வெள்ளி, வெண்கலம் எங்கும் இதே பேச்சு !

உலகமெங்கும் வலம் வரும் ஒலிம்பிக் ஜோதி, இப்போது கிரிஸ் நாட்டுக்குள்தான் சுற்றிக் கொண்டிருக்கிறது. எதென்ஸ் நகருக்கு 40 கி.மீ. வடக்கே உள்ள புராதன மாரத்தான் பகுதியை நேற்று முன் தினம் வந்தடைந்தது, ஜோதி. அங்கு அமர்க்கள வரவேற்பு அளிக்கப் பட்டது. அங்கிருந்து நேற்றுக்கிளம்பியது. சரியாக இன்று அது ஒலிம்பிக் கிராமம் வந்தடையும். பின்னர், போட்டி முடியும் வரை அதற்கு சிறிதும் ஓய்வில்லை.

பாதுகாப்புப் பணியில சர்வ தேசப்படைகள் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு கண் காணிப்பதால்,



•கேபின்கள் உள்ளன. இதற்கு வாடகை கொஞ்ச, நஞ்சமல்ல, ஒரு கேபினுக்கு ஒரு நாள் வாடகை ரூ.35 ஆயிரத்துக்கும் அதிகமாம். மொத்தக் கேபின்களில் 30 சதவீதத்தை ஒலிம்பிக் சங்கம், தனது வி.ஐ.பி. விருந்தினர்களுக்காக முன்பதிவு செய்து வைத்திருக்கிறது. (பிரான்ஸ் அதிபர் ஜாக்ஸ் சிராக், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆகியோர் இங்குதான் தங்கப்போகிறார்களாம்). கிரீஸ் நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு எதென்ஸில், பைராயஸ் துறைமுகத்தை வந்தடைந்த குயின்மேரிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. முக்கிய பிரமுகர்கள் தங்கப் போகும் கப்பல் என்பதால் பாதுகாப்புக்கெடுபிடிகள் மிக அதிகம்.

ஒலிம்பிக் போட்டிகளுக்காக 7 ஆண்டுகளாக கிரிஸ் நாடு உழைத்த உழைப்பு, இன்று வெளிச்சத்துக்கு வரப்போகிறது. மனித முயற்சிக்குச்

வங்களுக்குப் பிறகு நடக்கும் மிகப பெரிய சர்வதேச நிகழ்ச்சி என்பதால், தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம் இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஆகவே, பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக மிகக்கடினமாக உழைத்திருக்கிறது கிரீஸ்.

சர்வதேச பாதுகாப்புத் தவிர ஒலிம்பிக் பாதுகாப்புப் பணியில் 70 ஆயிரம் பொலீஸாரை ஈடுபடுத்தி இருந்தது. இப்போது மேலும் 35 ஆயிரம இராணுவ வீரர்களை ஒலிம்பிக் பாதுகாப்பில் இறக்கியிருக்கிறது.

எதென்ஸ் நகரம் பாதுகாப்பு வளையத்தில் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு வீரர்களைத் தாண்டி ஒரு கொசு கூட நகருக்குள பறந்து விடமுடியாது. அந்தளவுக்குக கெடுபிடிப் பாதுகாப்பு, இந்தப் பாதுகாப்புப் பணிகளுக்கு மட்டும் கிரீஸ அரசு செலவளித்துள்ள தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.7ஆயிரம் கோடி.இதுவே ஒரு புதிய ஒலிம்பிக் சாதனை. இதற்கு முன் பாதுகாப்புக்கு இந்த அளவுக்கு யாரும் செலவு செய்ததில்லை. ☎

(நன்றி இணையத்தளம்)

## மதுரையில் முதியவர் கோரக் கொலை

(மதுரை)

மதுரையில் வீட்டில் தனியாக இருந்த ஒரு முதியவரின் வாயை துணடால் இறுக்கி மர்ம நபர்கள் அவரைப படுகொலை செய்துள்ளனர்.

மதுரை புறநகர்ப் பகுதியான சக்தி நகரைச் சேர்ந்தவர் 83 வயதான இராமசாமி. சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று காலை இவர் வீட்டில் தனியாக இருந்தார். பி.ப.2மணியளவில் வெளியெ சென்றிருந்த அவரது மருமகள் கிருஷ்ணவேணி திரும்பிவந்தார். அப்போது வீட்டுக்குள்ளிலிருந்து இரண்டு பேர் வேகமாக வெளியேறியதைப் பார்த்தார்.

வீட்டுக்குள் நுழைந்ததும் வாயில் துண்டு இறுக்கப்பட்டு மாமனார் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

கொள்ளையடிப்பதற்காகவே இந்தக் கொலை நடந்ததாகத் தெரிகிறது.

இதற்கிடையே அண்ணா நகரில வசிக்கும் மோகன் ராம் என்பவர் பொலிஸல் ஒரு புகார் கொடுத்தார். அதில் தமது வீட்டிலிருந்த 32 சவரன் தங்க நகைகளும் 10 ஆயிரம் ரூபா ரொக்கமும் களவு போயிருப்பதாகத் தெரிவித்துள்ளார். (து)


## றைபிள் படையினரை வாபஸ் பெற முடிவு

(மணிப்பூர்)

மணிப்பூர் மாநிலத்தில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் அசாம் றைபிள் படையினரை வாபஸ் பெறவுள்ளதாக உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவித்துள்ளார்.


மணிப்பூரில் தீவிரவாதிகளை யொடுக்க ஆயுதப்படையினருக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கியுள்ள சட்டத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்தி வருவதாகப் புகார்கள் எழுந்துள்ளது.

விசாரணைக்காக இளம் பெண் ஒருவரைப் பிடித்துச் சென்ற றைபிள் படையினர் அவரைப் பாலியல் பலாத்காரம் செய்துகொன்று விட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து மணிப்பூரில ஆயுதப் படையினருக்கு எதிராகப் பல்வேறு தரப்பினரும் போராட்டம் நடத்தி வருவதால், அங்கு பதற்றம் நிலவுகிறது. (து)



வழக்கறிஞர்கள் சங்கத்தின் இரு பிரிவினரிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 3 வழக்கறிஞர்கள் தாக்கப்பட்டதையடுத்து, சென்னை உயர்நீதிமன்றம் எதிரே வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது அவர்களை கலைந்து போகுமாறு கூறிய காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது.

# இந்தியச் செய்திகள்



புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க வந்த பள்ளிச் சிறுவர்களுடன் பிரதமர்.

## ஜெயலலிதாவின் வீம்பு வீழ்ந்துவிட்டது தி.மு.க.தலைவர் கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

தி.மு.க.ஆட்சியில் வழங்கப்பட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் திரும்பக் கிடைத்ததற்கு மக்களவைத் தேர்தலில் கிடைத்த வெற்றி தான் காரணமென்றும், இந்தச் சிறப்பான வெற்றிகள் தொடரச் சேலம் சிறப்பு மாநாட்டுக்கு வர வேண்டும் என்றும் தி.மு.க.வினருக்கு அக் கட்சியின் தலைவன் கருணாநிதி அழைப்பு விடுத்துள்ளார்.

பொடாவை திரும்பப் பெற வலியுறுத்தியும், ம.தி.மு.க. பொதுச செயலாளர் வை.கோ.வை விடுவிக்கக் கோரியும் தி.மு.க. சார்பில் உண்ணா நோன்பு, கண்டனக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதையும், இதற்கு மத்திய, மாநில அரசுகள், அசைந்து கொடுக்காததையும் அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களவைத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி ஏற்பட்டதால் இப்பொழுது பொடா போகிறது என்றும், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ.. மீதான வழக்கை முதலமைச்சர் வாபஸ் வாங்க முன்வந்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் - விருதுநகர் மாநாட்டுக்கும் சேலம் மாநாட்டுக்கும் இடையேயிருந்த காலத்தில் மக்கள் சக்தியைத் திரட்டி வெற்றி பெற்றதனால் தான் ஜெயலலிதாவின் வீம்பு வீழ்ந்துள்ளது என்றும் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (து)

## இன்று ஒரு தகவல்

# விடுதலை

ஒரு சுதந்திரப் போராட்டவீரன் ஒருநாள் காட்டின் வழியே தனியாகப் போய்க் கொண்டிருந்தான். இருட்டி விட்டது என்ன செய்யலாம் என்று பார்த்தான். அங்கே ஒரு சத்திரம் தெரிந்தது."சரி! இன்றிரவு இங்கேயே தங்கி இருந்து விட்டு காலையில் போகலாம் " என்று முடிவெடுத்தான்.

நேராகப் போய் அங்கே தங்கிவிட்டான். சரியாகத் தூக்கம் வரவில்லை. ஏதோ சத்தம் கேட்டது. உயரே பார்த்தான் அங்கே கிளிக்கூண்டு தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கூண்டுக்குள்ளே ஒரு கிளி உள்ளே இருந்து கொண்டே "சுதந்திரம்,சுதந்திரம என்று கத்திக் கொண்டிருந்தது. இவன் அதைப் பார்த்தான். இவனுக்கு மனம் ஏதோபோல் ஆகிவிட்டது. ஐயோ பாவம் இந்தக் கிளியை இப்படிக் கூண்டுக்குள்ளே அடைத்துப் போட்டிருக்கிறார்களே அதன் மனம் என்ன பாடுபடும் விடுதலை அடைவதில் தான் அதற்கு எவ்வளவு ஆசை. அது தான் சுதந்திரம், சுதந்திரம் என்று அதே வார்த்தையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இவனுக்குத் தான் சிறையிலிருந்த நாட்கள் நினைவுக்கு வந்தது. அவனுக்குத் தெரியும் அடைபட்டிருப்பது எவ்வளவு கொடுமையான விஷயம் என்று. அந்தக்கிளியின் நிலைமையும் அப்படித்தான் என்பதை நினைத்துப் பார்த்தான் மிகவும் உணர்ச்சி வசப்பட்டான். உடனே ஒரு முடிவுக்கும் வந்தான்.

சரி.இந்தக் கூண்டுக்கிளிக்கு நாம் சுதந்திரம் வாங்கிக் கொடுப்போம். இந்தச் சத்திரத்தின் உரிமையாளருக்குத் தெரியாமல் அந்தக் கூண்டைத் திறந்து விடுவோம் என்று நினைத்து மெதுவாக எழுநது அந்தக் கூண்டை ரகசியமாக திறந்து விட்டான். உள்ளேயே உட்கார்ந்து பழக்கப்பட்ட கிளி கூண்டினுள்ளே உட்கார்ந்திருந்தது. அதை மெதுவாக வெளியில் எடுத்து வாசலுக்கு வந்தான். அதைப் பறக்க விட்டு விட்டு இவன் மீண்டும் உள்ளே வந்து படுத்துக் கொண்டான். இப்போது அவனுகககு நிம்மதியாக உறக்கம் வந்தது. கிளிக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்து விட்டானே அதனால்.

பொழுது விடிந்தது. காலையில் இந்த வரன் நிம்மதியாகக் கண்விழித்துப் பார்த்தான். அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி.மேலே தொங்கிக் கொண்டிருந்த கூண்டைப் பார்த்தான். அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. மேலே தொங்கிக் கொண்டிருந்த கூண்டின கதவு திறந்தபடியே இருக்க இரவு வெளியே கொண்டுபோய் விட்டகிளி மீண்டும் கூண்டின உள்ளே வந்து இருந்து கொண்டு சுதந்திரம் சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது.

இவன் அப்போது தான் உண்மையைப் புரிந்து கொள்கிறான். அதாவது அந்தக்கிளி சுதந்திரம் சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது உண்மை தான். ஆனால் அந்த வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் அது கத்திக் கொண்டிருக்கிறது. ஏதோ பழக்க தோஷத்தில் அப்படிக் கத்துகிறது அவ்வளவுதான. எதற்கு இந்தக் கதையைச் சொல்கிறேன் என்றால இன்று நம்மில் பலர் இந்த வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்தக் கிளி மாதிரித்தான் செய்து கொண்டிருக்கிறோம. அன்று ஒருநாள் ஓகஸ்ட் மாதத்தில் அன்னியர்களை வெளியேறச் சொன்னோம். அதேபோல் இன்னொரு ஓகஸ்ட் மாதத்தில் அவர்கள் போய் விட்டார்கள்.

அன்னிய மனோபாவம் நம்மிடமிருந்து வெளியேறி விட்டதா என்பதை யோசிக்க வேண்டிய நேரம் இது. அது போனால் தானே நாம் நாமாக வாழ முடியும். விடுதலையின் அர்த்தம் புரியாமல் அதைப் பற்றி வேகமாகப் பேசிக் கொண்டிருப்பதால் என்ன பிரயோசனம்? எதிர்காலம் நல்லபடியாக இருப்பது நமது கையில் தான் இருக்கிறது.

ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி. நாட்டின் எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஒரு கூட்டத்தல் உங்களிடம் கூறுவதற்கென்ன என்னிடம் ஒரு நலல செய்தியும் ஒரு கெட்ட செய்தியும் இருக்கிறது.

கி.பி 2000 ஆண்டுக்குப் பிறகு நாம் கழிவு நீரைச சுத்தப்படுத்தித் தான் பருக வேண்டியிருக்கும் என்றார். "சரி. நல்ல செய்தி' என்ன அதைச் சொல்லுங்கள் " என்றார்கள் அங்கு வந்திருந்த மக்கள். " நான் இப்போது சொன்னது தான் நல்ல செய்தி. கெட்ட செய்தி என்னவென்றால் அப்போது குடி நீராகச் சுத்தம் செய்யப் போதுமான அளவிற்குக் கழிவு நீர் கிடைக்குமா? என்பது தான்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேச்சை உடன் ஆரம்பிக்கும் வகையில்

# ஜனாதிபதியின் இடைக்கால நிர்வாக அலகு வேகமாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கையளித்துள்ள இடைக்கால நிர்வாக அலகைப் போன்று, ஜனாதிபதி சந்திரிகாவும் தனது அரசின் சார்பில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இடைக்கால நிர்வாக அலகை வேகவேகமாகத் தயாரித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன், அடுத்த வார இறுதியில் கொழும்பு வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படுவதால், தனது சார்பிலும் ஒரு இடைக்கால நிர்வாக அலகு தயாராக இருக்கும் பட்சத்தில், உடனடியாக அடுத்த கட்டப் பேச்சுக்களைத் தொடங்க விடுதலைப் புலிகளை அழைக்கலாம் என்றும், அப்போது இரு பகுதியினரின் இடைக்கால நிர்வாக யோசனைகளையும் பற்றிப் பேசுவதற்கான முன்மொழிதலை சந்திரிகா விடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 20 வருடக் கொடிய போரினால் நாடே குட்டிச்சுவராகி, சிங்கள மக்களின் வசதி வாய்ப்புக்களும் பாதிப்படைந்திருந்தாலும், முற்றாகப் பாதிப்படைந்துள்ள தமிழினத்திற்கு அடிப்படை உரிமைகளைக் கூட வழங்க மறுக்கும் இனவாதப் பேரினவாதிகளை சமாளித்து, ஜே.வி.பியையும கொள்கையளவில் அமைதிப்படுத்த, தான தயாரிக்கும் இடைக்கால நிர்வாக அலகு உதவும் என ஜனாதிபதி நம்புகிறார்.

விடுதலைப் புலிகள் ஒரு இடைக்கால நிர்வாக அலகைக் கையளித்திருந்தாலும், தான் தயாரித்துள்ள தனது இடைக்கால நிர்வாக அலகின் கீழ் தான் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், அதன்மூலம் விடுதலைப் புலிகளின் நிர்வாக அலகை ஓரங்கட்டும் அதேவேளை, சர்வதேச நாடுகளைத் தனது சமாதான முயற்சியில் நம்பிக்கை கொள்ளவைக்க முடியும் என்றும் சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், சர்வதேச நாடுகள் வழங்க இணங்கிய 4.5 பில்லியன் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உருவாகும் என்பதால், ஜனாதிபதி சந்திரிகா பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அதீத ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-க)

# இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதை இந்திய மீனவர்கள் தவிர்க்கவேண்டும்

## இந்தியாவின் புதிய கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதை இந்திய மீனவர்கள் கூடிய அளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என இந்திய கடற்படையின் புதிய தளபதி அட்மிரல் அருள் பிரகாஷ் தெரிவித்தார்.

இந்திய கடற்படையின் புதிய தளபதியாக அட்மிரல் அருள் பிரகாஷ் நேற்று முனதினம் பதவிப்பரமாணஞ் செய்து கொண்ட பின் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

அண்மையில் இந்திய மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிந்தேன்.

இதுபற்றி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். அத்துடன்,இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி செல்லாமலிருப்பதற்காகவும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செயவதற்காகவும் இந்தியக் கடற்படையினரை ரோந்துப் பணியில் ஈடுபடுத்துவதற்கு எண்ணியுள்ளேன்.

இதேவேளை, பொதுவாக சர்வதேச ரீதியில் மீனவர்கள் அனைவரும் நாட்டின எல்லைகள் குறித்து கவலைப்படுவதில்லை.

மாறாக மீன்பிடிப்பதிலேயே கவனமாக இருக்கின்றார்கள். இதனால், அவர்கள் வீண்பிரச்சினைகளில் மாட்டிக் கொள்கின்றார்கள் என்றார். (உ-க)

## இராசி பலன்

13. 08. 2004
(ஆடி 29, வெள்ளிக்கிழமை)
திரயோதசி பின்னிரவு 4. 54 மணிவரை
புனர்பூசம் பி. இ. 5. 10 மணிவரை
இராகுகாலம் 10. 35 -12. 05 மணிவரை
சுபநேரம் 6. 05 - 7. 35 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்**
சகோதரர் உதவி, காரியசித்தி, சுவாரசியம், தெய்வ தரிசனம்.

**இடபம்**
நண்பர்கள் மனஸ்தாபம், பொருள் விரயம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், திடீர்நன்மை.

**மிதுனம்**
சயன சுகம், தெய்வ தரிசனம், புதிய முயற்சி, பெரியோர் சந்திப்பு.

**கடகம்**
கோபப்படுதல், காரிய தாமதம், தொழில் மந்த நிலை, பொருள் விரயம்.

**சிங்கம்**
உறவினர் சந்திப்பு, பெருண்மயடைதல், தெய்வ தரிசனம், காரியசித்தி.

**கன்னி**
நல்ல சம்பவம், அதிக பிரயாசை, குடும்பநன்மை, நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
பித்தரோகம், புதிய சிந்தை, பிரயாணம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
குடும்பப்பிரச்சினை, வேலைப்பளு, போசனசுகம், காரிய தடங்கல்.

**தனுசு**
தேக ஆரோக்கியம், தெய்வசிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**மகரம்**
நல்ல சம்பவம், தெய்வ அனுகூலம், உறவினர் வருகை, தொழிலில் ஆர்வம்.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், ஆரோக்கியக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம்.

**மீனம்**
மனப்பயம், ரோகவிருத்தி, புதிய விடயம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# வவு.வளாகப் பிரச்சினைகள் பற்றி துணைவேந்தருடன் கலந்தாய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகப் பிரச்சினைகள் சம்பந்தமாக துணைவேந்தர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

இககலந்துரையாடலில் துணைவேந்தர் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,வவுனியா வளாக ஊழியா சங்கம் ஆகியன பங்குபற்றின. இச்சந்தர்ப்பத்தில பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள்,

★பேரவையினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு ஒரு மாதத்தினுள விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் இக்குழுவானது ஊழியர்கள் வைத்துப் பூட்டப்பட்டமைக்கான காரணத்தையும் ஆராய வேண்டும்.

★ஊழியர் வேலைக்குத் திரும்பும் பட்சத்தில் எந்தவித பழிவாங்கல் நடவடிக்கைகளும் நிர்வாகத்தால் எடுக்கப்படலாகாது. ஊழியர்கள், ஆசிரியர்களின் சம்பளம்உடனடியாக வழங்கப்படவேண்டும.

★ஊழியர்,ஆசிரியர்களுக்கிடையே கலந்துரையாடல் ஒன்றை வளாக முதல்வர் ஏற்பாடு செய்யவேண்டும். ஊழியர், மாணவர்களுக்கிடையேயும் கலந்துரையாடல ஒன்றை வளாக முதல்வர் ஏற்பாடு செய்யவேண்டும்.

★கலந்துரையாடலின் பின் சுமுகநிலை ஏற்பட்டும் பட்சத்தில் ஊழியர்கள் தாமாகவே பொலிஸில் தாம் செய்த முறைப்பாட்டை விலக்கிக் கொள்வார்கள்.

★மாணவர்களுக்கான இடவசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமுக நிலை ஏற்பட்ட பின்னரோ வளாக முதல்வர் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்பட்சத்தில் அதற்கான முழு ஒத்துழைப்பும் ஊழியர்களால் வழங்கப்படும்.

★வவுனியா வளாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்களின் இடையே புரிந்துணர்வின்மையின் பின்னணியில் சில சக்திகள் செயற்படுவதாக வவுனியா வளாக ஊழியர் சங்கம் கூறியுள்ளது. இந்த சக்திகளின் இவ்வகையான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட துணைவேந்தர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும.

★வவுனியா வளாகப் பிரச்சினைகள் தொடர்பாக சிரேஷ்ட மாணவ ஆலோசகர், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மார்ஷல், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோரிடம் கருத்துக்ககள் பெறப்படல் வேண்டும்.

★எதிர்காலத்தில் வளாகம் சுமுகமாக செயற்பட மாணவா பிரதிநிதி, ஆசிரியர் பிரதிநிதி,ஊழியர் பிரதிநிதி ஆகியோர் கொண்ட குழுவொன்றினை அமைத்து வளாக முதல்வர் கிரமமாக கலந்துரையாடல் நடாத்த வேண்டும. அதில் பீடாதிபதிகளும் இடம் பெற வேண்டும்.

★மாணவர்,ஊழியர் நலச் சேவைகளில் கூடுதலான அக்கறை செலுத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த பீடாதிபதி நலச் சேவைகளுக்கென தனியாக நிதி ஒதுககப்படுவதில்லை எனவும் பொது நிர்வாகத்தின் கீழ் நலச் சேவைகளுக்கான நிதிப்பகிர்வு அமையப் பெற்றுள்ளது என்றும் தனியாக நலச் சேவைகளுக்கென நிதி ஒதுக்கப்படுமானால் பல்வேறு பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளப் படுமெனவும் தெரிவித்தார். (உ)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இந்தியாவுக்கு பதக்க வாய்ப்பு உறுதி; பி.டி.உஷா பேட்டி

இந்தியாவின் தங்க மங்கை என்று அழைக்கப்பட்டவர் பி.டி.உஷா. ஆசிய போட்டியில் தங்கப்பதக்கங்களை வாரிக்குவித்த அவர் 1984ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்சில் நடந்த ஒலிம்பிக்கில் 400 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்தில் 4வது இடத்தை பிடித்தார்.



எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் வாய்ப்பு குறித்து பி.டி.உஷா கூறியதாவது,

இந்தியாவுக்கு பதக்க வாய்ப்பு உறுதியாக இருக்கிறது என்று எந்த விளையாட்டிலும் கூறமுடியாது. மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளது. டென்னிஸ், துப்பாக்கி சுடுதலில் வெண்கல பதக்கம் கிடைக்கலாம் என்று எதிர்பாக்கிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

1960ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் 400 மீற்றர் ஓட்டத்தில் 4வது இடத்தை பிடித்த மில்காசிங் கூறும்போது,

"ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால்தான் பதக்கம் கிடைக்கும். இவ்வளவு அதிகமான வீரர், வீராங்கனைகளை அனுப்புவது தேவையற்ற பணச செலவுதான் டென்னிஸ, துப்பாக்கி சுடுதல் (அஞ்சலி அல்லது ரத்தோர்), தடகளம் (அஞ்சுஜார்ஜ்) ஆகியவற்றில் வெண்கல பதக்கம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

முன்னாள் ஆக்கி கப்படன் அஜித்மில்சிங் இந்தியாவுக்கு 6 பதக்கங்கள் (ஆக்கி, துப்பாக்கி சுடுதல் (3), டெண்ணிஸ், நீளம் தாண்டுதல்) கிடைக்கும் என்றும், துப்பாக்கி சுடும் வீரர் மொராக் அலிகான் இந்தியாவுக்கு 8பதங்கங்கள் (ஆக்கி, துப்பாக்கி சுடுதல் (4), டெண்ணிஸ், நீளம் தாண்டுதல், பளு தூக்குதல் (மல்லேஸ்வரி அல்லது குஞ்சராணி) கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

முன்னாள் ஒலிம்பிக் வீரர், பில்பீர்சிங் பாட்டியா கூறும்போது, டென்னிஸ், பளு தூக்குதல் ஆகியவற்றில் தலா ஒரு பதக்கமும், துப்பாக்கி சுடுதலில் 3 பதக்கமும் கிடைக்கும் என்றார்.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியா 14விளையாட்டுக்களில் பங்கேற்கிறது. 75வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். (உ)




எதென்ஸ் ஒலிம்பிக்கைக் குறிக்கும் வகையில் ஒரிசாவில் உள்ள புரி கடற்கரையில் தனது திறமையை வெளிப்படுத்துகிறார் சர்வதேசப் புகழ் பெற்ற சிற்பக் கலைஞர் சுதர்ன் பட்நாயக்.

## ஒலிம்பிக் கால்பந்து எதென்ஸில் ஆரம்பம்

ஒலிம்பிக் கால்பந்து போட்டிகளில் ஆபிரிக்காவின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க ஐரோப்பிய அணிகள் காத்திருக்கின்றன.




கடந்த இருமுறைகள் தங்கப் பதக்கத்தை தட்டிச்சென்ற ஆபிரிக்க நாடுகளே தொடர்ந்து மூன்றாம முறையாக சாதிக்கத் தயாராக உள்ளன. கிரிஸ் தலைநகர் எதென்ஸில் இன்று ஒலிம்பிக் போட்டி அதிகாரபூர்வமாக தொடங்குகிறது. இதற்கு முன்னதாக ஆண்கள், பெண்களுக்கான கால்பந்து லீக் சுற்றுப் போட்டி நேற்று ஆரம்பமாகியது. இவ்வாறு 8 போட்டிகள் எதென்ஸ் நகருக்கு வெளியே நடக்கவிருக்கின்றன. (உ)

## விருந்துக்கு கலாம் அழைப்பு

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெற வீரர் வீரேந்திர சேவாக்கிற்கு. இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அழைப்பு விடுத்துள்ளார்.

சுதந்திர தின விழாவையொட்டி இந்திய ஜனாதிபதி பல துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருது வழங்கியும், விருந்து வழங்கியும் கௌரவிப்பது வழக்கமாகும். இந்திய கிரிக்கெற் வீரரான வீரேந்திர சேவாக



டெஸட் போட்டியில் 300 ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தவர். இதனைப் பாராட்டும் வகையிலேயே ஜனாதிபதி கலாம் சேவாக்கிற்கு அழைப்பு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சேரீனாவுக்கு மூட்டு வலி ஒலிம்பிக்கை விட்டு விலகினார்

இடது கால் மூட்டுவலி காரணமாக எதென்ஸ் ஒலிம்பிக் மகளிர் ஒற்றையர் டென்னிஸிலிருந்து விலகுகிறார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ். அதையடுத்து, அவுஸ் திரேலியர்வின் சமந்த ஸ்டௌசருக்கு எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவில் மூத்த சகோதரி வீனஸுடன் இணைந்து விளையாடுவதாக இருந்தார் செரீனா.

தற்போது அவருக்குப் பதிலாக யார் இப் பிரிவில் பங்கேற்பார்கள் என்பது குறித்து அமெரிக்கா ஆலோ சித்து வருகிறது.

2000 சிட்னி ஒலிம்பிக்கில் வீனஸ், செரீனா சகோதரிகள் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்றனர். ஒற்றையர் பிரிவில் வீனஸ் தங்கம் வென்றார். (உ)

## விளையாட்டு செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST




ஒலிம்பிக் இன்று ஆரம்பம்

## நீளம் தாண்டும் சாதனை வீரர் ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தார்

இந்திய ஒலிம்பிக் அணியில் இருந்து நீளம் தாண்டும் வீரர் அம்ரித்பால் நீக்கப்பட்டுள்ளதாக இந்திய தடகள கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கிரிஸ் தலைநகர் எதென்சில் இன்று ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இருக்கின்றன. இதில் பங்கேங்கும் இந்திய அணியின் வீரர், வீராங்கனைகள் பட்டியல் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் இடம்பெற்றிருந்த முன்னாள் தேசிய சாதனையாளரான அம்ரித் பால் (நீளம் தாண்டுதல்) தற்போது நீக்கப்படுவதாக இந்திய தடகள கூட்டமைப்பு செயலாளர் லலித்பனோட் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.



கூடைப்பந்து என்றாலே மேஜிக் ஜான்சனையும், மைக்கேல் ஜோர்டனையும் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். கனவு அணி என வர்ணிக்கப்பட்ட அமெரிக்க குழுவில் இவர்கள் இடம்பெற்று 1992 பார்சிலோனா போட்டியில் பங்கேற்றனர். அதில் தங்கப்பதக்கம் யாருக்கு

# முரளி தனிமைப்படுத்தப்பட்டு பலிக்கடாவாக்கப்படுகிறார்

## ரவிசாஸ்திரி குற்றச்சாட்டு

இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஆசியாவைச் சேர்ந்தவர் என்பதாலும், வெற்றிகரமான பந்துவீச்சாளராக இருப்பதாலும் தனிமைப்படுத்தப்படுகிறார், பலிக்கடாவாக்கப்படுகிறார் என்று இந்திய முன்னாள் கிரிக்கெற் வீரரான ரவிசாஸ்திரி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.



முன்னாள் கிரிக்கெற் வீரரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரவிசாஸ்திரி பெங்களூரில் நிருபர்களைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சுழல் பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரன் தனது அபாரமான பந்துவீச்சால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் இலங்கை அணிக்கு பலமுறை வெற்றிபெற்றுத் தந்திருக்கிறார்.

தவிர டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பல சாதனைகளையும் படைத்திருககிறார். டெஸ்ட் போட்டியில் அவர் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலஙகை அணியின் முக்கிய வீரர் மற்றும் மூத்த வீரர்களில் ஒருவராக திகழும் முத்தையா முரளிதரன் தனது அபாரமான சுழற்பந்துகளால் எதிரணி துடுப்பாட்டக்காரர்களை திணறடிக்கக் கூடியவர்.

இலங்கை அணிக் கப்டன் அர்ஜுன ரணதுங்க தலைமையில் வென்ற உலகக் கோப்பை அணியில் முரளிதரன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முத்தையா முரளிதரன் வலதுகையால் பந்துவீசும் வழக்கமுடையவர். சிறுவயதில் அவருக்கு போலியோ நோய் தாக்கப்பட்டதால் வலதுகையில் சிறிது பாதிப்பு ஏற்பட்டது. எனவே அவரது பந்துவீச்சு சர்ச்சையை கிளப்பியது.

ரணதுங்க கப்டனாக இருந்தபோது, இலங்கை அணி, அவுஸ்திரேலியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அப்போது அவுஸ்திரேலிய நடுவர், முரளிதரன் பந்தை வீசவில்லை, பந்தை எறிகிறார் என்று குற்றஞ்சாட்டினார்.

பின்னர், கப்டன் அர்ஜுனரணதுங்க அதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார். அணி வீரர்களின் ஒருமித்த ஆதரவால் அப்போது முடிவுக்கு வந்தது. பின்னர் இடையிடையே இப்பிரச்சினை கிளம்பி வருகிறது. அவரது பந்துவீச்சு குறித்து இன்னும் சர்ச்சைகள் எழுந்துகொண்டேதான் இருக்கின்றன.

முத்தையா முரளிதரன் ஆசிய நாட்டைச்சேர்ந்தவர் என்பதாலும், அவர் ஒரு வெற்றிகரமான பந்துவீச்சாளர் என்பதாலும், அவரது புகழையும், முன்னேற்றத்தையும் மறைக்கவே அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு தனிமைப்படுத்த முயற்சி நடக்கிறது. அவரை பலிக்கடாவாக்கப் பார்க்கிறார்கள் என்று கூறினார். (உ)

# மெய் சிலிர்க்கத் தொண்டாற்று பொய் சிலிர்க்க வாழாதே

கண்ணாடியின் பின் புறத்தில் பாதரசம் இருந்தால் தான் எமது



முகம் அதில் தெரியும். அந்தப் பாதரசம்தான் இறைவனின் அருள். கண்ணாடி நிழலில் இருந்தால் பின் புறம் உள்ள பாதரசம் நீண்டநாள் நீடிக்கும். வெயிலில் நீண்டநாட்கள் நீடிக்காது. உன்முகமும் தெரியாது. அதுபோல் எமது வெளி வேஷமும் நீண்ட நாளுக்கு நிலைக்காது.

ஆலயமணி தலை கவிழ்ந்திருந் தாலும் அதன் நாதமோ தொலை தூரம் வரை கேட்கும். அதைப்போல் நாமும் அடக்கமானவராகவே இருக்க வேண்டும். ஆத்திகம் பேசிக் கொண்டு பேர், புகழ், சுயநலம் என்ப வற்றிற்காக அலைபவனைவிட, பொதுநலம் கருதி அடக்கமாக உழைக்கின்ற நாத்திகன் மேலான வன். அடக்கமாக உழைக்கின்ற நாத்திகன் மேலானவன்.

தூய உணர்வோடும், பயபக்தி யோடும், தனி உரிமைகோராமலும் தொண்டு செய்யவேண்டும். பொன், பொருள், பந்தம் என்ற மூட்டை களைச் சுமக்காமல் பொறுப்புணர் வோடு தொண்டு செய்யவேண்டும். ஆன்மீகத்தில் கசப்பும் உண்டு. எதிர்ப்பும் உண்டு. இவற்றைப் பொருட்படுத்தாமல் ஆன்மீக ஈடு

## வெள்ளி நற்சிந்தனை

பாட்டுடன் தொண்டு செய்யவேண் டும். தொண்டு தொண்டாக இருக்க வேண்டுமே தவிர தொழிலாக இருக்கக் கூடாது.

ஏற்றத் தாழ்வு இல்லாமலும், தாழ்வு மனப்பான்மை இல்லாமலும் தொண்டு செய்யவேண்டும். ஆண்ட வனுக்காகவும், அடிகளாருக்கா கவும் தொண்டு செய்கிறேன் என்று நினைக்கக் கூடாது. பலகோடி பக் தர்களுக்காகத் தொண்டு செய்கி றோம் என்று நினைக்கவேண்டும். யாரிடத்திலும் காழ்ப்புணர்ச்சி காட் டக் கூடாது. அது எம் கைக்கு விலங் காக அமையும்.

என் குடும்பம், என் பிள்ளை என்று நினைப்பதுபோல மற்றோரையும் நினைத்தல் வேண்டும். அடுத்தவர் கள் எமக்கு என்ன செய்தனர் என்று நினைப்பதை விடுத்து நான் அடுத்த வருக்கு என்ன செய்தேன் என்று நினைக்கவேண்டும்.

எல்லோரையும் இணைத்துக் கொண்டே தொண்டாற்ற வேண்டும். இவனால என்ன நன்மை என்று நினைத்தல் கூடாது. செல்லாத காசாயினும் அதிலும் செப்பு உண்டு அல்லவா?

என்றைக்கும் தொண்டனாகவே இரு. எஜமானாக மாறநினைத்து எமனாக மாறாதே. மாறாகத் தொண் டனுக்கும் தொண்டனாகத் தொண்டு செய்தால் எமனுக்கே எமனாக மாறிவிடுவாய்.

குளித்தால் உடம்பில் உள்ள அழுக்குத்தான் நீங்கும். மன அழுக்குகள் போகாது, அந்த மன அழுக்குகள் நீங்கி உள்ளத் தூய்மையை அடைவதற்கு ஆன் மீக ஈடுபாடே மிகச்சிறந்தது.

எல்லாப் பாவங்களையும் இறை வன் மன்னித்துவிடுவான். ஆனால் மன்னிப்பே இல்லாத பாவம் ஒன் றுண்டு. அது என்ன தெரியுமா? 'நான்' என்ற அகங்காரம். அதுதான் பெரியபாவம். அந்த அகம்பாவம் அழியவேண்டும்.

ஒரு படகில் இரண்டுபக்கமும் உட்கார்ந்திருப்பவர்கள் துடுப்புப் போட்டுத் தள்ளினால்தான் படகு வேகமாகச் செல்லும், கரைசேரும். தள்ளாமல் தள்ளுவது போல பாவனை செய்தால் படகு வேகமா கச் செல்லாது கரையும் சேராது.

அதுபோல ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட பின்பு உண்மை உணர்வுடனும், உள்ளன்புடனும் தொண்டாற்றினால் கரைசேரலாம். தொண்டு செய்வது போல பாவனை செய்தால் நீங்கள் முன்னேறவும் முடியாது கரைசேரவும் முடியாது.

உண்மையான தொண்டுணர்வும்

**சி.யாழினி**

பக்தியும் இருக்கவேண்டும். குரு பக்தி அவசியம் இருக்கவேண்டும். குருவருள் கிடைக்கவேண்டுமானால் அடிகளாரைக் குருவாக ஏற்றுக் கொண்டு தொண்டு செய்பவனுக்குத் தொண்டு செய். அப்போது உனக்கு எளிதில் குருவருள் கிடைக்கும். பலன் எதிர்பாராத தொண்டிற்குப் பெரும் பலன் உண்டு.

---

## பெ.கூ. ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் நண்பகல் ஒரு மணி நேர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் சம்பள உயர்வு, தற்காலிக ஊழியர்களை நிரந்தர மாக்குதல் ஆகிய கோரிக்கை களை முன்வைத்தும், இந்திய நிறு வனம் ஒன்றிற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைக் கையளித் தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே ஊழியர்கள் ஆர்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

முற்பகல் 12 மணி முதல் 1 மணிவரை நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தில் பெரும் எண்ணிக்கை யிலான ஊழியர்கள், கூட்டுத்தாபன அலுவலகத்திற்கு முன்னாள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். (ச)

## காஸ் விலையேற்றம் கண்டித்து ஆர்ப்பாட்டம்

காஸ் விலையின் அதிகரிப்பைக் கண்டித்து நேற்றுமுன்தினம் அனு ராதபுரம் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு முன்னாள் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் ஆர்ப் பாட்டத்தல் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளினை ஏந்தியவாறு அரசாங்கத்திற்கும் ஜே.வி.பிக்கும் எதிராக கோஷங் களை எழுப்பினார்கள்.

அரசாங்கம் கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்றாது அத்தி யாவசியப் பொருட்களின் விலை களினை அதிகரிப்பதாகவும் செலவு அதிகரித்துள்ள வேளையில் காஸின் விலையும் அதிகரிக்கப்பட்டு இருப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (உ)

## மணிக் கூட்டுக் கோபுரம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு அம்பன் பெரியம்மாள் விநாயகராலயத் திற்கு சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் மணிக்கூட்டுக் கோபுரம் நிர்மாணிககப்பட்டு வருகின்றது.

டென்மார்க்கில் வசிக்கும் அம் பனைச் சேர்ந்த ஒருவர் இந்த நிதி யுதவியை வழங்கியுள்ளார்.(உ-52)

## ஆங்கிலதினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய ஆங்கிலதினப் போட்டிகளுக்கான தனி நிகழ்வு கள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரி யிலும் குழு நிகழ்வுகள் யாவும் மறுதினம் யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும் நடைபெறுமென யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-19)

## சங்கானையில் தொழுநோய்ப் பரிசோதனை

யாழ்.மாவட்டத்தில் தொழு நோயால் பாதிக்கப்படுபவர்களின் வீதம் அதிகரித்து வருவதை அடுத்து சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சுழிபுரம் பகுதியில் இந்நோய் தொடர்பான ஆய்வு ஒன்று கடந்த வாரம் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டது.

தொழுநோய்த் தடுப்பு இயக்க பொதுச் சுகாதார அதிகாரி மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பசேவை நல உத்தியோகத் தர்கள் இணைந்து சுழிபுரம் மேற் குப் பகுதியில் உள்ள சிறிகணேச சனசமூக நிலையத்தில் வைத்து இவ் ஆய்வினை மேற்கொண்டனர்.

சுமார் 142க்கும் அதிகமானவர்கள் இதில் பரிசோதனை செய்யப்பட்ட போதும் எவருக்கும் நோய் தொற்று அறிகுறிகள் தென்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்நோய் பரவும்விதம், பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய முற்காப்பு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (உ-252)

---

# இராஜதந்திரிகள் சேவைக்கு பட்டதாரிகளை நியமிக்கமுடிவு

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இராஜதந்திரிகள் சேவைக்கான ஆட்சேர்ப்புக்காகப் புதிய கொள்கை வகுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டலு வல்கள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் முறையற்ற விதத்தில் பல நியமனங்கள் வழங் கப்பட்டதால், இராஜதந்திரிகளுக் கான சேவையின் செயல்திறன், ஆக்கத்திறன் ஆகியவற்றில் எதிர் மறைத்தாக்கங்கள் ஏற்பட்டன.

இதனால், எதிர்வருங்காலங் களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணி யாற்றும் ஊழியர்களின் எண்ணிக் கையைக் குறைத்து 50 கோடி ரூபா முதல் 80 கோடி ரூபாவரை சேமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அரசியல் தலையீட்டால் நிய மனம் பெற்றவர்களும் போதிய தகைமைகள் இல்லாதவர்களும் திருப்பி அழைக்கப்படுவார்கள்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணி யாற்றுவதற்கு தகுதிவாய்ந்த பட்ட தாரிகளை அனுப்புவதற்கு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை விரைவில் அமைச்சு கோரும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள் ளது. (உ,க-60)

## மட்டு., அம்பாறை மாவட்டங்களில் 25பேர் இதுவரை சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

இவ்வருட ஆரம்பத்திலிருந்து நேற்றுமுன்தினம் வரை மட்டக் களப்பு அம்பாறை மாவட்டங்களில் 25 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை இராணு வத்தினரால் வெளியிடப்பட்ட அறிக்கை யில் இததகவல் வெளியாகியுள்ளது.

இதில் 13 பொதுமக்கள், 8 அர சியல்வாதிகள், இராணுவத்திற்கு தகவல வழங்கிய ஒருவர், புலனாய் வுத்துறை அதிகாரிகள் இருவர் மற்றும் ஒரு பொலிஸார் அடங்குவர் என அவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, புரிந்துணர்வு ஒப் பந்தம் கைச்சாத்தான காலப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் வரை 223 பேர் சுட்டுக் கொல்லப் பட்டுளளனர். இதில் 7பேர் புலனாய் வுத் துறையைச் சேர்ந்தவர்கள், 11 பேர் படைத்தரப்பினர் என இராணு வத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இலங்கை மக்களின் விருப்பப்படியே இறுதித் தீர்வு அமைய வேண்டும்

## இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

(கொழும்பு)

இலங்கை மக்களின் தேவை கள், தீர்மானங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே அந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகள் உருவாக்கப்பட வேண் டும்.

அத்துடன் இந்தத் தீர்வு இலங் கையின் ஐக்கியம், ஆட்புல ஒரு மைப்பாடு, இறைமை ஆகியவற் றையும் சிறுபான்மையினரின் கௌரவத்தையும் கட்டிக் காப்ப தாக அமையவேண்டும் என இந் திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பீட உறுப்பின ரான கீத்தாராம் யஸ்வே தெரிவித் துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யின் ஏற்பாட்டில் கொழும்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறு கையில்,

இலங்கையின் இனப்பிரச்சினை க்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும்.

இந்த வகையில், இலங்கை அரசு தமிழீழவிடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு உடன டியாக கொண்டு வரவேண்டும்.

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றார். (உ,க-60)

## அமைச்சரின் அலுவலகம் அருகே வெடி பொருட்கள் மீட்பு

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்ட தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ரி.பி. ரத்னாயக்காவின் அமைச்சு அலு வலகத்திற்கு அருகில் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அமைச்சின் அலுவலகத்திற்கு அருகில் வெடிபொருட்கள் இருப்ப தாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அதனை மீட்டுள்ளது டன் இது தொடர்பாக விசாரணை களை ஆரம்பித்துள்ளாகவும் நுவ ரெலியா பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (உ,க)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நிவிர்த்தி செய்யும் நோக்கில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியும், சாதாரண தர ஆங்கில மொழியில் 'டீ' அல்லது 'ஏ' தரத்தில். சித்தியும் கொண்டவர்களிடமிருந்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவிக் கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விரும்புவோர் சுயவிபரங்களு டன் விண்ணப்பங்களை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பிவைக்கும்படியும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-19)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல: 24 ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

01.

**விழித்தெழுவீர்!**

**சூழலைப் பாதுகாப்போம்**

**சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகள்**

☞ காடுகளை அழிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

☞ வீட்டுக்கு இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும்.

☞ நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளை நகரங்களில் இருந்து வெளியே அமைத்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும்.

☞ தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் தீங்கு விளைவிக்கும் புகை மற்றும், இரசாயனத்தைக் குறைக்க வேண்டும்.

☞ தொழிற்சாலைகளில் இருந்து வரும் இரசாயனக் கழிவுகள் நீர் நிலைகளில் சேருவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

-சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பு

(i) இங்கு காட்டப்பட்டுள்ளது
1) விளம்பரம் 2) சுவரொட்டி 3) கட்டுரை 4)அழைப்பிதழ்

(ii) இது வலியுறுத்தும் பிரதான கருத்து
1) மரப் பாதுகாப்பு 2) சூழல் பாதுகாப்பு
3) கழிவுகளின் பாதுகாப்பு 4) கழிவுக் கால்வாய்களின் பாதுகாப்பு

(iii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "விழித்தெழுவீர்" என்பதன் கருத்து
1) அதிகாலையில் நித்திரை விட்டெழல்
2) எப்போதும் விழிப்பாக இருத்தல்
3) சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றி தெளிவான விளக்கத்துடன் செயற்படல்
4) சூழல் பாதுகாப்பு பற்றி சபையோருக்கு எடுத்துச் சொல்லல்

(iv) கீழ்வரும் செயற்பாடுகளில் எது சூழல் பாதுகாப்புடன் ஒத்துப்போகின்றது.


(1)

(2)

(3)

(4)

(v) கீழ்வரும் கூற்றுக்களுள் எது மேலே தரப்பட்டுள்ள கருத்துடன் ஒத்துப்போகின்றது
1) பாரிய தொழிற்சாலைகளை நகரங்களில் அமைத்தல்
2) வீடுகளில் காணப்படும் பெரிய மரங்களைத் தறித்தல்
3) வீட்டுக் கழிவுகளை வீட்டுக்கண்மையில் கொட்டுதல்
4) வீட்டைச் சூழ்ந்து காணப்படும் திறந்த நிலையில் நீண்ட காலமாக நீர் தேங்கியுள்ள பாத்திரங்கள், சிரட்டைகளை அழித்தல்

**02. கீழ்வரும் சொற்களின் கருத்தை வெளிப்படுத்தும் சொற்கள் மேலே உண்டு. அவற்றைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(i) வனம் : ......................................
(ii) விருட்சம் :..................................
(iii) தகுந்த :...................................
(iv) அபாயம்:......................................

**03. கீழ்வரும் சொற்களின் எதிர்க் கருத்தை வெளிப்படுத்தும் சொற்களை மேலே உள்ள பகுதியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

(i) ஆக்குதல் : ......................... (ii) பாவனை:.......................
(iii) கிராமம் :...................... (iv) அதிகரித்தல் :.................

**04. கீழே உள்ள இடைவெளிகளைச் சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

(i) .................................. நாளை வீட்டுக்கு வருவேன்.
(ii) .............................. இன்று பாடசாலைக்கு வரமாடான்.
(iii) ............................ இன்று கோவிலுக்கு வருவாயா?
(iv) .......................... எல்லோரும் ஓடி விளையாடினார்கள்.
(v) ................................ வரிசையாகச் செல்லுங்கள்.

**05. கீழே உள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்கள் சார்பாக சரியான விடையைத் தெரிவு செய்க.**

(i) **வரன்** பாடசாலைக்குச் சென்றான்
1) ஆண்பால் 2) பெண் பால் 3) ஒன்றன் பால்

(ii) வயல் வெளியில் **மாடு** புல் மேய்ந்தது
1) ஆண்பால் 2) பெண் பால் 3) ஒன்றன்பால்

(iii) கலை விழாவில் **கஸ்தூரி** பாட்டுப் பாடினாள்
1) ஆண்பால் 2) பெண்பால் 3) பலர்பால்

(iv) துரையப்பா விளையாட்டரங்கில் **விளையாட்டு வீரர்கள்** அணியணியாகச் சென்றார்கள்.
1) ஒருமை 2) பன்மை 3) அஃறிணை

(v) மேசையின் மீது **புத்தகம்** விரித்தப்படி இருந்தது
1) ஒருமை 2) பன்மை 3) உயர்திணை

**06 . கீழ்வரும் சொற்களை ஒழுங்குபண்ணி கருத்து நிறைந்த வாக்கியம் அமைக்க.**

(i) காயம்பட்ட/ வைத்தியர்கள்/ கவனமாகப் /நோயாளியை/ பரிசோதித்தனர்

....................................................................................................

(ii) கோயிலுமில்லை/ சிறந்ததொரு/ தாயிற் /மந்திரமில்லை / மிக்க /தந்தை சொல்

....................................................................................................

**07 . கீழே சில பாடல்களின் முதல்வரி தரப்படுகின்றது. இவை என்ன பாடல் வகை என அருகே உள்ள இடைவெளியில் எழுதுக.**

(i) வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே ..............................

(ii) சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே ..............................

(iii) சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும் ..................

**08. கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் எதிரேயுள்ள கூட்டுக்குள் அடையாளமிடுக?**

(i) பொருட்களுக்கான விளம்பரம் அப்பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் ☐
(ii) கிராமங்களைவிட நகரங்களில் குறைந்தளவு வசதிகளே காணப்படுகின்றன. ☐
(iii) அமாவாசையன்று இரவில் சந்திரனின் முழுமையான பிரகாச மான பாகத்தைக் காணலாம் ☐
(iv) எல்லா வகையான பூச்சி இனங்களும் தாவரங்களுக்கு தீமையையே விளைவிக்கின்றன. ☐
(v) துவிச்சக்கர வண்டி ஓட்டும்போது தலைக்கவசம் அணிதல் வேண்டும் ☐

**09. மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ஜப்பான் நாட்டின் தலைநகரம்
1) புதுடில்லி 2) டோக்கியோ 3) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர 4) திம்பு


(ii) மத்திய மாகாணத்தில் உள்ள நகரம்
1) யாழ்ப்பாணம் 2) கொழும்பு 3) கண்டி 4) குருநகல்

(iii) காற்றினால் இசைக்கக்கூடிய இசைக்கருவி


(1)

(2)

(3)

(vi) 
அருகே உள்ள படத்தின் மூலம்
வெளிக்காட்டப்படும் அமைப்பு
1) காற்றாடி 2) காற்று வேகமா
3) அமுக்கமானி 4) காற்றுத்

(vi) 
அருகே காட்டப்பட்டுள்ள கருவி
புயன்பாடு?
1) காற்றடித்தல் 2) மரு
3) எண்ணெய் சேமிப்பு 4) தீய

10.

(i) 
பெயர்: ......................................
பயன்: ......................................

(ii) 
பெயர்: ......................................
பயன்: ......................................

(iii) 
பெயர்: ......................................
பயன்: ......................................

(iv) 
பெயர்: ......................................
பயன்: ......................................

(v) 
பெயர்: ......................................
பயன்: ......................................




☞ வாகனங்கள் செல்

☞ வாகனங்கள் செல்
முடியாது. தரித்து நி

☞ முட்ட ஆயத்தமா

அருகே உள்ள படத்தில் வீதிப்போக்குவரத்தைக்
வீதிச்சமிக்ஞை மின்விளக்கும் அவை மூலம் வெளி
கட்டளைகளும் தரப்பட்டுள்ளன. ஆனால், இவை ஒழு
தரப்படவில்லை. கீழே தரப்பட்டுள்ளவாறான மின்கு
வெளிப்படுத்தும் கட்டளைகளை எழுதுக?

11. (i) சிவப்பு விளக்கு ஒளிர்தல் :....................
(ii) சிவப்பு விளக்குடன் மஞ்சள் விளக்கும் ஒளிர்
(iii) பச்சை விளக்கு ஒளிர்தல் :....................
(iii) 

சிலவேளைகளில் ப
வாறு சிவப்பு வெளி
பச்சை அம்பு வெளி
படும். இவ்வாறு தென்படும் போது யாது செய்தல்

....................................................................

(v) விளக்குகளினால் வீதிப்போக்குவரத்து ஒழுங்
படுவது போன்று வேறு எம்முறையால் வீதிப்போ
டுப்படுத்தப்படுகின்றது? .................................

12) **கீழே இரு நிரல்களில் தகவல்கள் தரப்பட்டுள்**
**லாவது நிரலில் சில தொழில் முயற்சிகளும் இரண்டா**
**தொழிலின் விளை பொருட்களும் தரப்பட்டுள்ளன. தொ**
**வுப் பொருட்களை இணைக்குக. இதற்கு குறித்த**
**விளைபொருளின் இலக்கத்தை நடுவேயுள்ள கூட்டினு**

| நிரல் 1 | | |
|---|---|---|
| (1) கால்நடை வளர்ப்பு | ☐ | 1.கடல் அட்டை |
| (2) மீன் பிடிக் கைத்தொழில் | ☐ | 2. தும்புத்தடி, |
| (3) தும்புக் கைத்தொழில் | ☐ | 3 யோகட்,வெ |
| (4) பின்னுதல், இழைத்தல் | ☐ | 4. பெட்சீட்,சா |
| (5) நெசவுத்தொழில் | ☐ | 5பாய்,பெட்டி |

.................. எல்லோரும் ஓடி விளையாடினார்கள்.

.................. வரிசையாகச் செல்லுங்கள்.

ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள
பாக சரியான விடையைத் தெரிவு செய்க.

டசாலைக்குச் சென்றான்

2) பெண் பால் 3) ஒன்றன் பால்

ளியில் **மாடு** புல் மேய்ந்தது

2) பெண் பால் 3) ஒன்றன்பால்

ழாவில் **கஸ்தூரி** பாட்டுப் பாடினாள்

2) பெண்பால் 3) பலர்பால்

பா விளையாட்டரங்கில் **விளையாட்டு**
ணியணியாகச் சென்றார்கள்.

2) பன்மை 3) அஃறிணை

ன் மீது **புத்தகம்** விரித்தபடி இருந்தது

2) பன்மை 3) உயர்திணை

சொற்களை ஒழுங்குபண்ணி கருத்து நிறைந்த
மைக்க.

ட்/ வைத்தியர்கள்/ கவனமாகப் /நோயாளியை/
னர்

மில்லை/ சிறந்ததொரு/ தாயிற் /மந்திரமில்லை
தை சொல்

..................................................

பாடல்களின் முதல்வரி தரப்படுகின்றது. இவை என்ன
ன அருகே உள்ள இடைவெளியில் எழுதுக.

ந்தரம் வாழ்க தமிழ் மொழி ..................

பவே ..................

ா தாயே - நம் சிறி லங்கா ..................

நமோ நமோ தாயே ..................

டு மணல் மீது படமொன்று கீறும் ..................

அதை வந்து கடல் கொண்டு போகும் ..................

கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின்
ாதிரேயுள்ள கூட்டுக்குள் அடையாளமிடுக?

ளுக்கான விளம்பரம் அப்பொருட்களின்
யை அதிகரிக்கும் ☐

ளைவிட நகரங்களில் குறைந்தளவு வசதிகளே
டுகின்றன. ☐

சையன்று இரவில் சந்திரனின் முழுமையான
ன பாகத்தைக் காணலாம் ☐

கையான பூச்சி இனங்களும் தாவரங்களுக்கு
யே விளைவிக்கின்றன. ☐

கர வண்டி ஓட்டும்போது தலைக்கவசம் அணிதல் ☐

ரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்

நாட்டின் தலைநகரம்

2) டோக்கியோ 3) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர 4) திம்பு

ாகாணத்தில் உள்ள நகரம்

ம் 2) கொழும்பு 3) கண்டி 4) குருநகல்



வெளிக்காட்டப்படும் அமைப்பு யாது?

1) காற்றாடி 2) காற்று வேகமானி
3) அமுக்கமானி 4) காற்றுத் திசைகாட்டி

(vi) 

அருகே காட்டப்பட்டுள்ள கருவிகளின் பயன்பாடு?

1) காற்றடித்தல் 2) மருந்து விசிறுதல்
3) எண்ணெய் சேமிப்பு 4) தீயணைத்தல்

10.



(i) பெயர்: ..................................................
பயன்: ..................................................

(ii) பெயர்: ..................................................
பயன்: ..................................................

(iii) பெயர்: ..................................................
பயன்: ..................................................

(iv) பெயர்: ..................................................
பயன்: ..................................................

(v) பெயர்: ..................................................
பயன்: ..................................................




☞ வாகனங்கள் செல்லலாம்

☞ வாகனங்கள் செல்ல முடியாது. தரித்து நிற்கவும்

☞ புறப்பட ஆயத்தமாகுக

அருகே உள்ள படத்தில் வீதிப்போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் வீதிச்சமிக்ஞை மின்விளக்கும் அவை மூலம் வெளிப்படுத்தப்படும் கட்டளைகளும் தரப்பட்டுள்ளன. ஆனால், இவை ஒழுங்கு முறைப்படி தரப்படவில்லை. கீழே தரப்பட்டுள்ளவாறான மின்குமிழ் ஒளிர்வுகள் வெளிப்படுத்தும் கட்டளைகளை எழுதுக?

11. (i) சிவப்பு விளக்கு ஒளிர்தல் :..................................

(ii) சிவப்பு விளக்குடன் மஞ்சள் விளக்கும் ஒளிர்தல் :..............

(iii) பச்சை விளக்கு ஒளிர்தல் :..................................

(iii) 


சிலவேளைகளில் படத்தில் உள்ளவாறு சிவப்பு வெளிச்சத்துடன் பச்சை அம்பு வெளிச்சமும் காணப்படும். இவ்வாறு தென்படும் போது யாது செய்தல் வேண்டும்?

..................................................

(v) விளக்குகளினால் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு கட்டுப்படுத்தப்படுவது போன்று வேறு எம்முறையால் வீதிப்போக்குவரத்து கட்டுப்படுத்தப்படுகின்றது? ..................................

12) கீழே இரு நிரல்களில் தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதில் முதலாவது நிரலில் சில தொழில் முயற்சிகளும் இரண்டாவது நிரலில் அத்தொழிலின் விளை பொருட்களும் தரப்பட்டுள்ளன. தொழிலுடன் விளைவுப் பொருட்களை இணைக்குக. இதற்கு குறித்த தொழிலுக்குரிய விளைபொருளின் இலக்கத்தை நடுவேயுள்ள கூட்டினுள் எழுதுக.


| நிரல் 1 | | நிரல் 2 |
|---|---|---|
| (1) கால்நடை வளர்ப்பு | ☐ | 1.கடல் அட்டை,மீன் எண்ணெய் |
| (2) மீன் பிடிக் கைத்தொழில் | ☐ | 2. தும்புத்தடி, விளக்குமாறு |
| (3) தும்புக் கைத்தொழில் | ☐ | 3 யோகட்,வெண்ணெய் |
| (4) பின்னுதல், இழைத்தல் | ☐ | 4. பெட்சீட்,சாரம் |
| (5) நெசவுத்தொழில் | ☐ | 5பாய்,பெட்டி கடகம் |

[4] கீழே மனிதனின் உடலில் நிகழும் தொழிற்பாடுகளும் அவற்றோடு தொடர்புடைய அங்கங்களும் உண்டு. தரப்பட்டுள்ள தொழிற்பாட்டுக்குரிய சரியான அங்கத்தைக் குறிக்கும் விடையின் மேல் (X) புள்ளடி இடுக.

① இதயம் ② மூளை ③ இரைப்பை ④ நுரையீரல் ⑤ தோல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) சமிபாடு | ① | ② | ③ | ④ | ⑤ |
| (ii) சுவாசம் | ① | ② | ③ | ④ | ⑤ |
| (iii) இரத்தஓட்டம் | ① | ② | ③ | ④ | ⑤ |
| (iv) சிந்தனை | ① | ② | ③ | ④ | ⑤ |
| (v) பாதுகாப்பு | ① | ② | ③ | ④ | ⑤ |

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத கீழ்வரும் அட்டவணையை அவதானிக்குக.




(i) 1 கிலோகிராம் பூசணியின் விலை யாது? ..................

(ii) 1 கிலோகிராம் கத்தரிக்காயின் விலை யாது? ..................

(iii) 1 கிலோகிராம் தக்காளிக்காயின் விலை யாது? ..................

(iv) 1 கிலோகிராம் மிளகாயின் விலை யாது? ..................

(v) மிகவும் குறைந்த விலையுடைய மரக்கறி எது? ..................

(vi) கூடிய விலையுடைய மரக்கறி வகையில் இரண்டு கிலோகிராம் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்? ..................

(vii) மேற்படி மரக்கறிவகையில் ஒரு கிலோகிராம் வாங்கும் போது எந்த மரக்கறி எண்ணிக்கையில் அதிகமாகக் கிடைக்கும்? ..................

(viii) மேற்படி மரக்கறி வகைகளுள் கொடியின மரக்கறிவகை எது? ..................

(ix) மேற்படிமரக்கறி வகைகளுள் பருமனில் விசாலமானமரக்கறி எது? ..................

(x) 100 ரூபா பணத்தைக் கொடுத்து மிளகாய் ஒரு கிலோவும் தக்காளிக்காய் 1 கிலோவும் வாங்கினால் கடை முதலாளி மீதியாக எவ்வளவு தருவார்?
..................

(xi) இம்மரக்கறி வகைகளில் பூசனி 1 கிலோ தக்காளிக்காய் 2 கிலோவும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ..................

**16) வெவ்வேறு தொலைக்காட்சி வகைகள் பற்றிய விபரத்தை கீழ் வரும் அட்டவணை தருகின்றது. இதன் துணையோடு கீழ்வரும் விடை எழுதுக.**

| மாதிரி | விலை | திரை அகலம் | தயாரிக்க நாடு |
|---|---|---|---|
| A | 12 000.00 | 14 அங்குலம் | தென்கொரியா |
| B | 16 000.00 | 14 அங்குலம் | கொங்கொங் |
| C | 22 000.00 | 20 அங்குலம் | கொங்கொங் |
| D | 40 000.00 | 26 அங்குலம் | ஜப்பான் |
| E | 42 000.00 | 26 அங்குலம் | மேற்கு ஜேர்மனி |

(i) மாதிரி A யும் மாதிரி B யும் எவ்வகையில் வேறுபடுகின்றது ?
..................................................

(ii) மாதிரி B யும் மாதிரி C யும் எவ்வகையில் ஒத்ததன்மையைக் காண்பிக்கின்றது
..................................................

(iii) மாதிரி D யும் மாதிரி E யும் சமமான திரை அகலத்தைக் கொண்டிருந்த போதும் அவற்றின் விலை வேறுபடுவதற்கு காரணம் யாது?
..................................................

(iv) மிகவும் விலை கூடிய மாதிரி யாது?
..................................................

(v) ஒருவரிடம் ரூபா 42 000.00 உள்ளது. ஆனால் அவர் 3 தொலைக்காட்சிப்பெட்டிகளை வாங்கவேண்டி உள்ளது. அவர் எவ்வகையான தொலைக்காட்சிகளை வாங்கியிருப்பார்? அவருக்கு ஏற்பட்ட செலவு யாது?
..................................................

(vi) ஒருவர் 26 அங்குல ஜப்பான் T. V ஒன்றையும் 14 அங்குல கொங்கொங் T, V ஒன்றையும் கொள்வனவு செய்தார். இதற்காக ரூபா 60 000.00 தைக் கடைக்காரரிடம் கொடுத்தார். அவருக்கு கிடைத்த மீதிப்பணம் எவ்வளவு?
..................................................

[17] உமது பிறந்த தினத்திற்கு வருமாறு உமது நண்பர் ஒருவருக்கு கடிதம் ஒன்றை எழுதுக. உமது கடிதம் 6 வரிகளுக்கு குறையாமலும் சரியான எழுவாய் பயனிலைகளுடனும் அமைந்திருக்க வேண்டும்.

**இவ்வினாத்தாள்களுக்குரிய விடைகள் நாளை வெளிவரும்.**

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

இல:23 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

♦ கீழே விபரிக்கப்பட்டுள்ள கூற்றுக்களுடன் சரியாகத் தொடர்புபடும் படத்தின் இலக்கத்தை அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.

01. ♣ இம்மரத்தின் கிளைகள் பிரிந்து காணப்படுகின்றன
♣ மூலவேர் நீண்டு செல்ல கிளை வேர்கள் தோன்றியுள்ளன
♣ அகண்ட தட்டையான இலை
♣ பூக்களும் காய்களும் காணப்படுகின்றன



1) 2) 3) 4) 5)

02. ♣ இவர் ஒரு மாணவி ஆவார்
♣ இவர் எப்போதும் கழுத்துப்பட்டி அணிந்துள்ளார்
♣ இவருக்கு மெல்லிய நீண்ட முகம் ஆகும்
♣ இவர் எப்போதும் தலைமயிரை இரட்டைப் பின்னலாக பின்னி இருப்பார்



1) 2) 3) 4) 5)

♦ கீழே உள்ள வினாக்களில் செயற்பாடு ஒன்று கூட்டுக்குள் தரப்படுகின்றது. அதைத் தொடர்ந்து அந்த செயற்பாட்டுக்கான மூன்று காரணங்கள் தரப்படுகின்றன. அந்தக் காரணங்களில் மிகவும் பொருத்தமான காரணத்தினைக் குறிக்கும் இலக்கத்தை கூட்டுக்குள் எழுதுக.

03. **கறிக்கு உப்புப் போடுகின்றார்கள்**
1) உப்பு விலை குறைவான பண்டம்
2) உப்பு இல்லாத பண்டம் குப்பையில் ஆகையால்
3) உப்பு கறிக்கு சுவையூட்டுகின்றது.

04. **வியாபாரிகள் தக்காளிப் பழத்தை சிவப்பு பொலித்தினால் மூடி வைக்கின்றார்கள்**
1) தக்காளிப்பழம் வெளியே தெரிவதற்காக
2) தக்காளிப்பழம் சிவப்பு - பொலித்தீனும் சிவப்பு - வியாபாரக் கவர்ச்சிக்காக
3) தக்காளிப்பழத்தை வாங்குவோர் தொடாமல் இருக்க

05. **மின்கம்பிகள் வெயில் காலங்களில் வளைந்து காணப்படுகின்றன.**
1) மின்கம்பிகள் நன்கு இழுத்துப் பூட்டப்படவில்லை
2) மின்கம்பிகளாக வளையாத மரம், பிளாத்திக்கு பொருத்தப்படாமை
3) மின்கம்பிகள் வெயில் சூட்டுக்கு விரிவடைந்தமை.


♦ கீழே முதலாவது பெரிய கூட்டினுள் சில உடற்பாகங்கள் தரப்பட்டுள்ளன. இவை பொருத்தக் கூடிய விலங்கின் உடலின் பகுதியும் இரண்டாவதாக உள்ள பெரிய கூட்டினுள் தரப்பட்டுள்ளது. வினாவுக்கருகே தரப்பட்டுள்ள பிராணியின் உடலின் அருகே அதன் பகுதிக்குரிய இலக்கத்தை எழுதுக.




06. 07. 08. 09. 10.



♦ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. 
உருவில் உள்ளவாறு மாபிள்களை அடுக்கின் 10வதாக அடுக்கப்படும் குவியலில் எத்தனை மாபிள்கள் இருக்கும்.......................................

12. 

இந்த பற்சில்லுகள் சுற்றும்போது ஒரே திசையில் சுற்றும் பல்சில்லுகள் எவை?
.........................................

13. இங்கு தரப்பட்டுள்ள பாடல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்

**குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே**
**எங்கே போகிறாய்?**
**கொத்திக் கொத்தித் தானியத்தை**
**தின்னப் போகிறேன்.**

**சின்ன அணில் பிள்ளை நீயும்**
**எங்கே போகிறாய்?**
**வண்ண மாம்பழத்தை நானும்**
**தின்னப் போகிறேன்.**

**ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி**
**எங்கே போகிறாய்?**
**ஆலிலையும் கோரைப் புல்லும்**
**தின்னப் போகிறேன்.**

பாடலின்படி பின்வரும் உணவை உண்போர் பெயரை எழுதுக.
1) தானியம் ...................... 2) மாம்பழம் ...................
3) ஆலிலையும் கோரைப் புல்லும் ......................................


♦ 1ம், 2ம் உருக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

14. 
1) குளிர்மை
2) வெப்பம்
3) வெதுவெதுப்பு
(...........)

15. 
1) தாவரம்
2) விலங்கு
3) அனைத்தும்
(.........)


♦ கீழ்வரும் கோலத்தை விளங்கிக் கொண்டு இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை அருகேயுள்ள மூன்று விடைகளில் இருந்து தெரிவு செய்க.

16.




1) 9
2) 20
3) 14

17.





1) 10
2) 16
3) 24

♦ மிகவும் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில்

18. இயற்கையாகவும் சுயமாகவும் பகலில் ஒ எது? ...........
19. இலங்கையில் புழக்கத்தில் உள்ள கா உயர் பெறுமதி என்ன? ...........
20. இலங்கையில் அரச பாடசாலைகளில் கொள்ளும் கல்வியை எப்படி அழைப்ப

♦ கீழே உணவு வகைகளும் அவற்றை உண்ணும் வகைப்படுத்தப்பட்டுள்ள விதத்தை இப்படம் க கவனமாக அவதானித்து சரியான விடையைத் தெரி கீழ்க் கோடிடுக.





21. உணவு எத்தனை வகையாகப் பிரித்துக் ளது?
1) மூன்று வகை 2) இரண்டு வகை 3)
22. திரவ உணவை உண்ணும் உயிரினம்
1) ஆடு 2) தவளை 3)
23. திண்ம உணவை உண்ணும் உயிரினம்
1) வண்ணத்துப்பூச்சி 2) தாரா 3)
24. உணவை மெல்லாமல் முழுமையாக வி னம் எது?
1) நுளம்பு 2) ஆடு 3) தவ
25. உணவை உறிஞ்சிக் குடிக்கும் உயிரின
1) தாரா 2) வண்ணத்துப்பூச்சி

♦ இங்கு தரப்பட்டுள்ள முதல் இரு சொற்களுக் தொடர்பை அவதானித்து இடைவெளிக்குரிய சொ செய்து அதன் கீழ்க் கோடிடுக.

26. தேனீ : தேன் கூடு :- கறையான் ..........
1) ஈசல் 2) கறையான் கூடு 3) புற்று 4)
27. இனிமை : சீனி :- புளிப்பு ..........
1) மாம்பழம் 2) எலுமிச்சம்பழம்
3) சர்க்கரை 4) கைப்பு

(சி


டாவதாக உள்ள பெரிய கூட்டினுள் தரப்பட்டுள்ளது.
க தரப்பட்டுள்ள பிராணியின் உடலின் அருகே அதன்
லக்கத்தை எழுதுக.




07. ____ 08. ____ 09. ____ 10. ____



விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



உருவில் உள்ளவாறு மாபிள்களை அடுக்கின் 10வதாக அடுக்கப்படும் குவியலில் எத்தனை மாபிள்கள் இருக்கும் ....................................




இந்த பற்சில்லுகள் சுற்றும்போது ஒரே திசையில் சுற்றும் பல்சில்லுகள் எவை?

.......................................

தரப்பட்டுள்ள பாடல்களை நன்கு வாசித்து
கிக் கொள்ளுங்கள்

சே குருவிக் குஞ்சே
றாய்?
காத்தித் தானியத்தை
கிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய்?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.

டி ஆட்டுக்குட்டி
கிறாய்?
கோரைப் புல்லும்
கிறேன்.

பின்வரும் உணவை உண்போர் பெயரை எழுதுக.
...................... 2) மாம்பழம் ...................
யும் கோரைப் புல்லும் .......................................

க்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பொருத்
ல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப்
டின் மீது எழுதுக.




1) குளிர்மை
2) வெப்பம்
3) வெதுவெதுப்பு
(...........)

15. 


1) தாவரம்
2) விலங்கு
3) அனைத்தும்
(.........)

கோலத்தை விளங்கிக் கொண்டு இடைவெளிக்குப்
எண்ணை அருகேயுள்ள மூன்று விடைகளில் இருந்து
.




1) 9
2) 20
3) 14

17.




1) 10
2) 16
3) 24


♦ மிகவும் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

18. இயற்கையாகவும் சுயமாகவும் பகலில் ஒளியைத் தருவது எது? ..............................

19. இலங்கையில் புழக்கத்தில் உள்ள காசுத் தாளின் உயர் பெறுமதி என்ன? ..............................

20. இலங்கையில் அரச பாடசாலைகளில் நீர் பெற்றுக் கொள்ளும் கல்வியை எப்படி அழைப்பர் ................

♦ கீழே உணவு வகைகளும் அவற்றை உண்ணும் உயிரினங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ள விதத்தை இப்படம் காண்பிக்கிறது. கவனமாக அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.




21. உணவு எத்தனை வகையாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது?
1) மூன்று வகை 2) இரண்டு வகை 3) ஐந்து வகை

22. திரவ உணவை உண்ணும் உயிரினம் எது?
1) ஆடு 2) தவளை 3) நுளம்பு

23. திண்ம உணவை உண்ணும் உயிரினம் எது?
1) வண்ணத்துப்பூச்சி 2) தாரா 3) நுளம்பு

24. உணவை மெல்லாமல் முழுமையாக விழுங்கும் உயிரினம் எது?
1) நுளம்பு 2) ஆடு 3) தவளை

25. உணவை உறிஞ்சிக் குடிக்கும் உயிரினம் எது?
1) தாரா 2) வண்ணத்துப்பூச்சி 3) நுளம்பு

♦ இங்கு தரப்பட்டுள்ள முதல் இரு சொற்களுக்கிடையேயுள்ள தொடர்பை அவதானித்து இடைவெளிக்குரிய சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

26. தேனீ : தேன் கூடு :- கறையான் ................
1) ஈசல் 2) கறையான் கூடு 3) புற்று 4) மழை காலம்

27. இனிமை : சீனி :- புளிப்பு ...............
1) மாம்பழம் 2) எலுமிச்சம்பழம்
3) சர்க்கரை 4) கைப்பு

28. ஆடு : குட்டி :- பசு ................
1) பிள்ளை 2) குட்டி 3) கன்று 4) காளை

29. நாய் : குரைக்கும் :- குயில் ................
1) பாடும் 2) கத்தும் 3) ரீங்காரமிடும் 4) கூவும்

30. முக்கோணம் : 3 பக்கம் :- சதுரம் ................
1) 4 பக்கம் 2) 4 உச்சி
3) 4 விளிம்பு 4) பக்கம் சமன்

♦ ஒரு விருந்துபசாரத்திற்காக F,G,H,I,N,O,P என்ற ஏழு பெருந்தகையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதும் முன்னாலிருந்து பின்னோக்கி 1-7 வரைக்கும் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டுள்ளதுமான ஏழு கதிரைகளில் அமருதல் வேண்டும். அவர்கள் அமரும் ஒழுங்குகள் பின்வரும் விதிகளுடன் இணங்குதல் வேண்டும்.

♦ O வின் கதிரைக்கு உடனடியாக பின்னால் இருக்கும் கதிரையில் F அமருதல் வேண்டும்.

♦ N இன் கதிரைக்கு உடனடியாக முன்னால் இருக்கும் கதிரையிலும் N இன் கதிரைக்கு உடனடியாக பின்னால் இருக்கும் கதிரையிலும் G அமர முடியாது.

♦ H இன் கதிரைக்கும் P இன்கதிரைக்கும் இடையே செப்பமாக இரு கதிரைகள் இருத்தல் வேண்டும்.

♦ I இன் கதிரைக்கும் P இன் கதிரைக்குமிடையே குறைந்த பட்சம் ஒரு கதிரையேனும் இருத்தல் வேண்டும்.

♦ கதிரை 3 இல் N அமருதல் வேண்டும்.

31. கதிரை 3 இல் அமர்ந்திருப்பவர் யார்?
1) P 2) O 3) N 4) I


32. O இன் கதிரைக்கு முன்னால் இருக்கும் கதிரையில் அமர முடியாதவர்
1) P 2) N 3) I 4) F

33. 4வது கதிரையில் அமரமுடியாதவர்
1) G 2) P 3) I 4) F

34. கதிரை 1 தொடக்கம் கதிரை 4 வரை அமர்ந்திருப்பவர்களை சரியாகக் குறிக்கும் ஒழுங்கு
1) P,G,N,F 2) G,P,N,I 3) G,P,I,F 4) P,O,N,H

35. F கதிரை 6 இலும் H கதிரை 7 இலும் அமர்ந்தால் எவர் கதிரை 2இல் அமருதல் வேண்டும்
1) P 2) I 3) N 4) G

♦ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

36. 


அருகேயுள்ள கடிகார முகப்புடன் பொருத்தக் கூடிய சரியான உரு எது?



1) 2) 3) 4)

37. கணித உருவங்கள் சில அவற்றில் உள்ள கோணங்களின் அடிப்படையில் பெயரிடப்படும். கீழ்வரும் உதாரணத்தை அவதானித்து செயற்படுக.




கீழ்வரும் உருக்களில் எண்கோணி எது?



1) 2) 3) 4)


38. முன் பின்னாகவும் பின் முன்னாகவும் வாசிக்கும் போது ஒரே சொலலாக அமைந்துள்ள எழுத்துக்களைக் கொண்ட சொல் அல்லாதது.
1) விகடகவி 2) நீதிபதி 3) மகரகம 4) திகதி

39. “Ball” என்னும் சொல்லுடன் தொடர்புடைய உரு.



1) 2) 3) 4)

40. “Apple”என்னும் சொல்லுடன் தொடர்புடைய உரு.



1) 2) 3) 4)

# வெள்ளி முற்றம்

# மன்னிப்பாரா?

## பவானி ஆழ்வாப்பிள்ளை



"மூர்த்தி,நான் பெற்ற ஒரே பிள்ளை நீயப்பா! என் ஆசை, கனவு ! கற்பனை எல்லாம் உன்னைப் பொருளாகக் கொண்டவைதானே ! நீ வாழ்வில் துன்பத்தைத் தேவையை உணராது வாழ்வதற்கென்றால் எந்தத் தியாகமும் எனக்குப் பெரிதாக தோன்றவில்லை. என் இதயம் துடிப்பதே உன் நினைவால் மூர்த்தி! அந்த இதயம் வெடித்து நான் இறக்க வேண்டுமென்றால் அந்த குலம் கெட்டவளை மனங்குளிர மணந்துகொள். உன்னைப் பெற்றவர்கள் ஊரில் தலைதூக்க முடியாது. சிறுமைப்பட்டு,மனமுடைந்து சாவதுதான் சந்தோஷம் என்றால் அவளை மணந்துகொள்!... எங்கே, என்னைப் பார் மூர்த்தி, அவளை மறந்துவிடுவேன் என்று ஒரு வார்த்தை சொல்லி என் மனங் குளிரச் செய்யடா!... ஒரு வார்த்தைதான்!... பெற்றவள் கெஞ்சுகிறேன்..." மூர்த்தி அந்தக் காட்சியை நினைவு கூரச் சகியாதவன் போல் கண்களை இறுக மூடிக்கொண்டான். பெற்றவளின் மனதை மகிழ்விக்க மூர்த்தி அந்த ஒரேயொரு வார்த்தையைக் கொடுத்து விட்டதால் இன்று உள்ளமும் உணர்வு மிழந்த உருவமாய் உலவுகிறான். அன்று மூர்த்திக்குப் பெருஞ் சோதனை. அவன் சுமை ஒன்றும் புதிதல்ல. யுகயுகமாய் இரு உணர்ச்சிகளுக் கிடையில் நிகழும் போராட்டம் தான். ஒன்றைக் கடமை என்பர்! மற்றதைக் காதல் என்பர்! கதைகளில் படித்திருக்கிறான் மூர்த்தி. சினிமாவில் பார்த்திருக்கிறான். நேரில் கண்டுமிருக்கிறான். அவனுடைய ஐந்து நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் நால்வர் காதலை மறந்து கடமை பெரிதெனக் கவலையற்றுக் கல்யாணமும் செய்து கொண்டார்கள். எஞ்சிய நண்பன் ஒருவன் தான் காதலித்து வெற்றி கண்டான். ஆனால் அவன் காதலித்தவளோ அந்தஸ்துள்ளவள், அழகுள்ளவள்,ஆஸ்தியுள்ளவள். எல்லா விதத்திலுமே அவனுக்கு ஈடுகொடுத்தாள். இந்நிலையில் காதலுக்கு தோல்வி எது? பிச்சையைக் கூடப் பாத்திரமறிந்து தான இடச்சொல்லிவிட்டார்கள் பெரியவர்கள். காதலையும் அப்படித்தான் இடமறிந்து மதிப்பிட்டுக் கொடுக்க வேண்டுமோ?

அந்தச் சம்பவம் நடந்து இன்று ஆறு மாதங்கள் சென்று விட்டன. நாளை உதயத்தில் சுசீலாவுக்குத் திருமணம். குலம், கோத்திரம் பார்த்துத் திருமணம்.உலகின் உதய வேளையில் சுசீலாவின் வாழ்வும் மூர்த்தியின் வாழ்வும் அஸ்தமித்து இருள் பாய்ந்துவிடும். வீட்டு மாடியில் அவன் அறையில் மூர்த்தியின் உருவம சாய்வு நாற்காலியில் கிடத்தது. அவன் உணர்வோ தெருக் கோடியில் சுசீலாவின் கல்யாணக்களை தோய்ந்த வீட்டை நோக்கி ஓடிவிட்டது. மூர்த்தி கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பது. நாதஸ்வர கீதம் திறந்த ஜன்னலூடே காற்றில் மிதந்து வந்தது. மேள ஒலி அவன் இதயததைப் பிளப்பது போலிருந்தது. மனதில் பட்ட பச்சைக் காயம் ரணமாக வலித்தது. மூர்த்தி எழுந்து ஜன்னலை அறைந்து மூடி னான். சுசீலா வின் குணத்திலே குறைவில்லை என்றாலும் பிறப்பிலே குறை வைத்து விட்டார் படைத்த கடவுள். அவளின் நிலையை அறிந்தும் தன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்களென்று தெரிந்ததும் மூர்த்திதான் உள்ளத்தை நெகிழ விட்டான். எண்ணும் திறனென தனக்கு இருந்த தெல்லாம் அவளைச் சுற்றிப் படரவிட்டான். தன் அறிவின் எச்சரிக் கைக்குப் புறம்பான முடிவை கொண்டு விட்டான். ஆனால் அந்த முடிவைப் பின் பற்றிச் செல்ல வேண்டிய தருணத்தில் துணிவிழந்த கோழையாகி விட்டான்.

சுசீலா ஒளிவு மறைவு அற்றவள். அவள் மூர்த்தியிடம் எதையுமே மறைக்கவில்லை.

"மூர்த்தி,ஏழ்மையிலும் நான் கண்ட நிறைவே நான் தரக் கூடிய நிதியம். குணமே நான் தரும் குலம். ஆனால் நமது சமூகம கொடுமை வாய்ந்தது மூர்த்தி. எண்ணித்தான் துணிந்தீர்களா? அல்லது இவை உணர்ச்சி வேகத்தில் பேசும் வார்த்தைகளா?"

"நான் துணிந்துவிட்டேன் சுசீ. உலகம் வேகமாக முன்னேறுகிறது. அந்த முன்னேற்றப் பாதையில் சாதி வரம்பு கள் நிலைத்து நிற்க முடியாது.நாளைய உலகம் நம்மைத்தான் ஆதரிக்கும் சுசீ.இதில் சிந்திப் பதற்கு என்ன இருக்கிறது?' எவ்வளவு தன்னம் பிக்கையோடு மூர்த்தி அன்று பேசினான். இன்று மனச்சாட்சியின் பாரத்தை தாங்காது புழுப்போல நெளிகிறான். சுசீலா அவனை நம்பினாள். ஆமாம்! அவன் திண்மையில், திடசித்தத்தில் நம்பிக்கை வைத்தாள். இன்று அவள் எண்ணத்தில் ஒரு கணம் கூட நிலைக்கத் தகுதியற்றவன் ஆகிவிட்டான்.

மூர்த்தியின் மனம் கலாசாலை நாட்களை நோக்கித் தாவியது. எத்தனை இன்பமான நாட்கள் அவை. அந்த வாலிப சமுதாயத்திலே காதலுக்கு எதிர்ப்பு இல்லை. ஆதரவுதான் கிடைத்தது. அந்தக் கவலையற்ற வாழ்க்கையோட்டத்தில் பெற்றோர்களின் எதிர்க்கக்கூடுமென்ற சிறு நினைவு கூடத் தேய்ந்து விட்டது. வாழ்க்கையின் பரிதபாமே இதுதான். சீர்திருத்தக் கருத்துக்களைச் சிந்தையாய்க் கொண்ட இளைஞர் உலகம் சாதி,சமய வேற்றுமைகளை மதிப்பதில்லை. அவை இன்றைய சந்ததிக்கு அர்த்தமற்றவையாய்த் தோன்றும். அதனால் தான் பழமையில் ஊறிய புதிய சந்ததியின் மனப்போக்கு அதற்கு விளங்குவதில்லை. ஆசார, அனுஷ்டானங்களில் ஊறிப் பழைய சமூக திட்டத்தைப் போற்றி வாழும் முதிய சந்ததி சமூக சீர்திருத்ததை ஆதரிப்பதில்லை. சாதியை ஒழிப்பது சத்தியத்தை அழிப்பதை ஒக்கும் என்று எண்ணும் சந்ததி அது. அதனால்த்தான் கடமையைப் பாசத்தைக் காட்டிக் கழங்கமற்ற இளம் உள்ளங்களைச் சிதைத்து விடுகிறது. மூர்த்தியின் தந்தை கண் கலங்கக் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.

"மூாத்தி, உணக்கு வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் அளிக்க முடியாது போய்விடுமோ என்ற பயத்தால் எனக்கு வேறு குழந்தையே பிறாக்காது பார்த்துக்கொண்டேன். விளையாட்டல்ல, மூர்த்தி. உண்மை தான் . கடைசியில் எனக்கு நீ செய்யும் உபகாரம் இது தானா? மானத்தோடு வாழ்ந்து விட்டேன் அப்பா! மானத்தோடு என்னைச் சாகவிடு மூர்த்தி!" மூர்த்திக்கு மனம் தாளவில்லை. அவர் பச்சையாய்த் தம் உள்ளத்தைத் திறந்து காட்டியது அவனை என்னவோ செய்தது. உள்ளத்தில் கொப்பளிக்கும் ஆற்றாமை தானே அவரை அப்படிப்பேசச் செய்தது. இப்படியும் ஒரு தியாகமா?

"அப்பா... அப்பா... நீங்கள் விரும்பிய படியே செய்கிறேன் அப்பா!" மூர்த்திக்கு அப்பொழுது தன் குரலே வேற்று மனிதனின் குரல் போல், விசித்திரமாக ஒலிப்பது போல் தோன்றியது. மூர்த்தி சற்றே உடம்பை நொழிந்து கொடுத்தான். பெற்றோருக்கு நிம்மதி அளித்துவிட்டவன், தன் நிம்மதியைப் பறிகொடுத்து விட்டான். அவனை இதயத்தில் செதுக்கப்பட்ட அந்த உயிரோவியத்தைப் என்ன முயன்றும் அவனால் அகற்றி விடமுடியவில்லை. சுசிலா தான் அவனைப்பற்றி என்ன நினைத்திருப்பாள். அன்றொருநாள் அவளிடம் பெரிதாக வீரம் பேசினானே!

"மூர்த்தி,எங்கள் இருவரை மட்டுமன்றி, இது உங்கள் பெற்றோரையும் சுற்றத்தையும் சம்பந்தப்பட்ட விஷயம். எங்கள் சமூகம் அப்படிப்பட்டது. எனக்காக எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும் உறுதி உங்களுக்குண்டா? எனக்காக ரத்தபாசத்தின் பிணைப்பைக்கூட உதறிவிட முடியுமா உங்களால்? " சுசீயின் உள்ள அடித்தளத்திலே இந்த அச்சம் சதா அரித்துக்கொண் டிருந்தது. நியாயமான அச்சம் தானே! மூர்த்தி அவளுடைய விரிந்த கண்களை, சற்றே திறந்த உதடுகளை, புருவவளைவைப் பார்த்துப் பசாத்தோடு, பெருமையோடு சிரித்தான்.

"சுசீ,தாழ்வில் நீ கண்ட திருப்திதான், வாழ்வில் எனக்கும் வேண்டியது. ஏனக்குச் சுற்றமும் சூழலும் இனி நீ தானே? ஒருவருக்கொருவர் துணையாக வாழ்வது போதாதா?' சுசீ என்மேல் அத்தனை அவநம்பிக்கையா உனக்கு? அத்தனையும் சொற்கள் தான். வெறும் வெற்றுச் சொற்கள் தான். அன்று அந்தச் சிறுமிக்கு இருந்த அறிவு, தைரியம்- அவற்றில் ஒரு துளிகூட அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. அவள் உள்ளத்தின் நம்பிககை, ஆசை,கனவு அத்தனையையும் குழி தோண்டிப் புதைத்து விட்டான். சுசீலா அவனை நோகவில்லை; குற்றம் கூறவில்லை; வெறுக்கவுமில்லை.

" மூர்த்தி, உங்கள் பொற்றோரின் மனச் கசப்பின் அடிப்படையிலே நம் வாழ்வை அமைத்துக்கொள்வதால் சுகமில்லை. உங்கள் மனைவியாக வருபவள் உங்கள் குடும்பத்தை வாழ்விக்க வருபவள்- குடும்பத்தைக்குலைக்க வருபவள் அல்ல. வருந்தாதீர்கள். காலம் உங்கள் உள்ளக்காயத்தைக் ஆற்றி விடும்" அறிவு வார்த்தைகளை உருவாக்கி உதிர்த்தது. ஆனால் உள்ளமோ.

**1960களில் பவானி ஆழ்வாப்பிள்ளை சிறு கதை மூலம் வாசகர்களாலும் விமர்சகர்களாலும் பெரிதும் பேசப்பட்டவர். துணிச்சலோடு கதைகளில் கருத்துக்களைச் சொல்லக் கூடியவர். இவர் வெளியிட்ட கடவுளரும் மனிதரும் சிறு கதைத் தொகுதி தரமான தொன்றாகக் கணிக்கப்பட்டது.**

உடைந்து சுக்கலாகிக் கொண்டிருந்தது. அடக்க முடியாது கண்களில் பொங்கிய கண்ணீர் துடைக்கத்துடைக்கப் பெருகியது.

"சுசீ! உன்னை! எப்படி மறப்பேன் சுசீ! உன்னை எப்படி மறப்பேன்?" சட்டென்று அவள் கைகளைப்பற்றித் தன் மார்பில் புதைத்துக் கொண்டான். சுசீ இன்னொருவன் உடைமையாவதா? முடியாது! முடியவே முடியாது! வெறிபிடித்தவன் போல் அவளை இமையாது பார்த்து நின்றான்.

"சுசீ, உனக்கீளித்துவிட்ட இதயத்தை வேறெந்தப் பெண்ணுக்கும் என்னால் கொடுக்க முடி யாது சுசீ! எனக்கு மிக அருகில் இருந்த நீஇன்று அணுக முடி யாத இலட்சியமாகி விட்டாய். என் நெஞ்சில் நிலைத்த உன் நினை விலேயே நான் வாழ்வில் திருப்தி காணுவேன். நீ என்னை மறந்து சந்தோஷமாக வாழவேண்டும் சுசீ... மறபிறவி என்று ஒன்றி ருந்தால்!.... "

மறுபிறவி! தொடுவானம் போல உருவிழங்காத புரியதா மறுபிறவியை நினைத்து ஆசையை, உள்ளத்தாபத்தைத் தணித்துக்கொள்ளமுடியுமா?

மூர்த்தி பெருமூச்சுவிட்டான். மெல்லிய நாதஸ்வர ஒலி அடங்கி வெகுநேரமாகிவிட்டது. வெளியே பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. உலக இருளுக்கு ஒளி ஏற்ற ஒரு நிலவு உண்டு! அவன் உள்ள இருளுக்கு?.... ஏன் இல்லை? சுசீயின் நினைவு, அவன் உள்ளத்தில் என்றும் சிரிக்கும் சுசீயின் அழகு முகம் அவன் வாழ்வில் இருள் என்பதே இல்லாமற் செய்துவிடும்.... விடிய 6.00 மணிக்குக் கோயில் முஹூர்த்தம் என்று கேள்விப் பட்டிருந்தான். கல்யாண வீட்டுக்காரர் எல்லோருமே தூங்கியி ருப்பார்கள் உலகமே உறங்கிவிட்டது. ஆனால் அவன் உள்ளத் திற்குத் தான் இனி உறக்கமென்பதில்லையே! சுசீலா தூங்கு வாளா? அல்லது அவனைப்போல் நினைவுகளால் அலைப் புண்டு தவித்துக்கொண்டிருப்பாளா? சுசீலா தான் அதற்குள் திருமணத்திற்குச் சம்மதிப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அதற்குள் அவனை அவளால் மறக்க முடிந்தாத? ஏன் மறக்கக் கூடாது? அவனை நினைத்து அவள் உருக வேண்டும்? நம்பி வந்தவளை நாட்டாற்றில் விட்டுவிட்டான் ஏளனத்திற்கு, அவ மானத்திற்கு ,அவதூறுக்கு ஆளாக்கிவிட்டான்.

அவனுக்காக அவள் வாழ்வெல்லாம் நிராதரவாய், நிறைவற்றவளாய் அலைய வேண்டும் என்று நியதியா? ஆமாம். சுசீலா அவனை மறக்கத்தான்வேண்டும் அது தான் அவனுக்குத் தகுந்த தண்டனை. ஆனால்.... ஆனால் மூர்த்தியால்தான் அவளை மறக்க முடியவில்லையே! அவன் அவளை மறக்க விரும்பவில்லையே! அன்று அவள சென்னவார்த்தைகள் இன்று போல் அவன் காதில் ஒலித்தன.

"மூர்த்தி, உங்கள் மனைவியாய் வாழ நான் கொடுத்து வைக்கவில்லை. இருந்தும், நீங்கள் என்னை -என்னை மட்டுமே காதலிக்கிறீர்கள் என்ற நினைவே எனக்கு நிறைவளிக்கும். நான் எதற்காகவும் வருந்தவில்லை. நான் எங்கு சென்றாலும், என்ன வானாலும் உங்கள் நினைவு தான் என்னை வாழ்விக்கும். மறவாதீர்கள்!" சுசீலா ஆழ்ந்து, உணர்ந்து வாழ்பவள். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஏதோ அற்புதத்தை, ஜீவ இரகசியத்தை உணர்பவள. அவளுக்காக இந்தக் கொடுமை நடக்க வேண்டும்?... கடவுளே சுசீலாவின் அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவன் காதில் ஒலித்தன. இவைகளினூடே தொன்றலின் முணுமுணுப்புப் போல அவள் குரல் தான் அந்த வார்த்தைகளை அவன் காதில் வந்து ஓதிற்று.ஏனோ மூர்த்திக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. சுசீலா அருகிலிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. மூர்த்தி தன் இதயத்தை அமுக்கிப்பிடித்தான். முகத்தைக் கரங்களில் புதைத்துக் கொண்டான்.

" ஐயோ சுசீ! ' உள்ளத்தைப்பிளந்து எழுந்தது அவ் வேதனைக்குரல். "ஐயோ சுசீ! ' பாவம்! அவன் வேறென்ன சொல்ல முடியும்? வார்த்தைகளில் வடிக்கமுடியுமா அந்த வேதனையை? சொல்லித்தெரிய முடியுமா அந்த இதயத்தின் வலி? அனுபவித்தல்லவா அறிய வேண்டும்!

"மூர்த்தி,மனச்சாட்சி ஒன்றின் முன்தான் மனிதன் இவ்வுலகில் மண்டியிடவேண்டும். மனச்சாட்சியின் சொற்படி வாழ்வை அமைப்பவன் தெய்வத்தின் வழி நடப்பவன் ஆவான்" மீண்டும் சுசீயின் அதே ரகஸ்யக் குரல். மூர்த்தி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான். ஏன் இன்று மட்டும் இந்த எண்ணங்கள் அவன் நினைவில் தோன்றுகின்றன? சுசீயைப் பற்றி எத்தனையோ இனிய நினைவுகள், இன்பக்கதைகள் எல்லாம் இருக்க, இன்று மட்டும் இந்தச் சில வார்த்தைகள் அவன் நினைவில் ஓங்குகின்றன. சுசீ நாளை இன்னொருவனை மணக்கப் போகிறாளென்றா? இல்லை இல்லை. சுசீ உள்ளமும் உணர்வுமாக என்றும் அவனுக்கே உரியவள். அவளை மணக்கப்போகிறவன்- பாவம்- அவள் உடலைத்தானே ஆளப்போகிறான்? ஆமாம், அவள் தன்னை மறந்துவிட்டாள் என்று நினைத்தது மடத்தனம். சுசீ தன் காதலின் நினைவை என்றென்றும் மறக்க மாட்டாள்! மறக்க முடியாது. இந்த நினைவு மூர்த்தியின் நொந்த மனதிற்கு ஏதோவொரு நிறைவளித்தது...

"சலக் ... சலசலக்!..." மூர்த்திதிடுக்கிட்டுச் சப்தம் வந்த பக்கம் திரும்பினான். "சல சலக்... சலக் !" மூடிய ஜன்னல் கண்ணாடியின் வெளிப்புறத்தில் சிறு கற்கள் மோதி விழுந்தன. யாரோ வெளியே நின்று அக் கற்களை ஏறிந்து அவன் கவனத்தைக் கவர முயல்கிறார்கள்போலும்! மூர்த்தி எழுந்து ஜன்னலை திறந்தான். அங்கே... அங்கே...

"சுசீலா!" மூர்த்தி மெல்லக்கூவினான் ஆமாம்! அவள் தான்! கரிய போர்வையால் முக்காடிட்டு இருந்தாள். நிமிர்ந்து மேல் நோக்கிய அவள் முகத்தில் நிலவெளி வீசியது. மூர்த்தி திரும்பிப் படிகளைப் இரண்டு எட்டில் கடந்து வெளியே ஓடினான். அவள் நின்ற இடத்தில் அவளைக் காணவில்லை பிரமையோ என...

'மூர்த்தி? ' மெல்ல இழைபோல் அவள் குரல் இருளிலில் இருந்து எழுந்தது. 'உண்மையாக நீ யா சுசீ? இங்கே எப்படி வந்தாய்? உன்னைத்தேடமாட்டார்களா? இல்லை மூர்த்தி. தலையிடி என்று சீக்கிரம் தூங்கச்சென்று விட்டேன். எல்லோரும் தூங்கி விட்டார்கள். அறைக்கதவைப் பூட்டிச் சாவியை எடுத்து வந்தேன். விடியும் மட்டும் என்னைத்தொந்தரவு செய்ய மாட்டார்கள் அவர்கள் எழுந்திருக்கும் முன் திரும்பி விடுவேன்'

'சரி. இங்கே நிற்க வேண்டாம் உள்ளே வா சுசீ. வீட்டில் என்னைத் தவிர ஒருவருமில்லை. அப்பா, அம்மா வெளியூர் போய் விட்டார்கள். வா!' அறையினுள் மூர்த்தி விளக்கை ஏற்றினான். சுசீலா கண்களைக் கூசிக்கொண்டு அவனுக்கெதிரே சுவரில் சாய்ந்து கொண்டாள்.

"நாளைக்கு எனக்குத் திருமணம்...." பாதி தனக்குள்ளும் பாதி உரத்துமாய் முணுமுணுத்த சுசீலா மூர்த்தியை நிமிர்ந்து நோக்கினாள்.

"மூர்த்தி, நான் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். என்றதும் ஆச்சரியப்பட்டீர்களா? என் தாயின் திருப்திக்காக இந்த சமூகத்தில் வாழவேண்டிய நிற்பந்தத்திற்காக திருமணம் செய்துகொள்ள உடன்பட்டேன்.மூர்த்தி, என் உள்ளத்தையும் உணர்வையும் உங்கள் ஒருவரால்தான் தொடமுடியும் . ஆனால். ஆனால் இன்று என் உடலைக் கூட இன்னொருவன் தொட நேரும் என்ற நினைப்பையே என்னால் தாங்க முடியவில்லை. மூர்த்தி. நான் உங்களுக்குரியவள், என் உள்ளமும் உணர்வும் உடலும் உங்களுக்குக் குரியவள் . என் வாழ்வும் உங்க ளோடு ஆரம்பித்து உங்களோடு முடிவதொன்று. உங்களுக் குள்ளே அது என்றென் றைக்குமாய் ஒன்றிவிடட்டும். மூர்த்தி ஆண்டவனுக்கு அர்ப்பணமா கிவிட்ட மலர் பொன் தட்டில் இருந் தாலும் புழுதியில் வீழ்ந்தாலும் புனிதம் குறையாது. உங்களோடு ஒன்றுவதால் என் புனித குறையாது மூர்த்தி!" அவள் நிறுத்தி விட்டு அவனைப்பார்த்தாள்.

"ந என்ன... சொல்கிறாய் சுசீ?" அவன் குரல் நடுங்கியது. "உங்களுக்குப் புரியவில்லையா, மூர்த்தி? இல்லை உங்களுக்கு நன்றாகப் புரிகிறது மூர்த்தி. காதலித்தவனையே கணவனாகக் கொள்வது தான் கற்பெனில் இந்த என் முடிவு கற்பு நெறிக்குச் சிறிதும் புறம்பானதல்ல மூர்த்தி.."

"உண்மையாகவா சுசீ?... கற்பனைக்கெட்டாத சுகம் என்று ஒனறு இருந்தால் மூர்த்தி அதை அக்கணம் உணர்ந்தான் சுசீலா ஓடி வ்ந்து அவனருகே மண்டியிட்டாள்.

மூர்த்தி நேர்மையே உருவான உங்கள் சுசீலா ஒழுக்கந் தவறிப் பேசுகிறாள் என்று நினைக்கிறீர்களா? இல்லை என் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்ததால்தான் உங்களிடம் வந்திருக்கிறேன். உங்கள் உரிமையை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுங்கள். நமது வாழ்வை இக்கணமே வாழ்ந்து முடித்துவிடுவோம். கோடி இன்பங்களையும் ஒரு கணத்தினுள் குவித்துக் கொள்வோம். நாளை சுசீலா நடைப்பிணமாகிவிடுவாள்.

சட்டதிட்டத்தை,சாதிவரம்புகளை மதித்தவர்கள் மனித இதயங்களை மதிக்கவில்லை. அதனால் சுசீலா இன்று பண்பிழந்தவளா? ஒழுக்காங்கொட்டவளா? வழுக்கி விழுந்தவளா? அன்றி இது தான் வாழும் வீரமா? சுசீலா துடிக்கும் உதடுகளைப் பல்லால் அழுத்திப்பிடித்தாள் .

நீர் ததும்பும் கண்ணீருடன் மூர்த்தி அவளை ஏறிட்டுப் பார்த தான். சுச உன் மனக் குமுறல் எனக்குப் புரிகிறது. புழுதியில் விழுந்த மலர் பூஜைக்கு உதவாது. நீ என்றும் பூஜைக்குரிய மலராகவே இருக்க வேண்டும். காதலுக்கு உடல் அவசியமில்லை உள்ளம் தான் முக்கியம்.

நாளை உனக்கு மாலையிடப் போகிறவன் தான் உனக்கு வாழ்வளிப்பவன். அவன மனதுக்கியைய நடந்து கொள். உனக்கு வாழ்வு தர வகையற்ற என்னைக் கடவுள் மனனிப்பாராக. சுசலா அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள. அதில் காதல் இருக்கவில்லை கண்ணியம் இருந்தது. ★


## ஈராக்கில் உள்ள அமெ.படைகள் வாபஸ்!

# ஜோன் ஹெரி திட்டம் ஜோர்ஜ் புஷ் எதிர்ப்பு

(புளோரிடர்)

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை விலகிக்கொள்ளும் ஜனநாயக் கட்சி வேட்பாளரான ஜோன் ஹெரியின் திட்டத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நிராகரித்துள்ளரர்.





புளோரிடா மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த புஷ் இது பற்றிக் கூறிய தாவது,

ஈராக் போருக்கு ஆதரவாக 2 ஆண்டுகளுக்கு முன்பு ஹெரி வாக்களித்தார். 220 நாட்களுக்கு முன்பாக தன்னை போருக்கு எதிரான வேட்பாளராக அறிவித்துக் கொண்டார்.ஈராக் போர் குறித்த நிலைப்பாட்டை ஜோன் ஹெரி அடிக்கடி, மாற்றிக் கொள்கிறார். அதிபர் தேர்தலுக்கு இன்னும் 83 நாட்கள் இருக்கின்ற போதிலும் நிலைப்பாட்டை ஹெரி மீண்டும் மாற்றிக் கொள்ளப்போதிய கால அவகாசம் இருக்கிறது.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் தங்கள் பணியை முடிக்காமல் திரும்புவதை நாங்கள் விரும்பவில்லை. அரசியல் இப்பிரச்சினையை முடிவு செய்யக்கூடாது என்றார் புஷ்.2002 ஒக்டோபரில் ஈராக் போருக்கு ஆதரவாகக் ஹெரி வாக்களித்தார். ஆனால், தனக்குக் கிடைத்த ஆதரவை, புஷ் தவறாகப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் போதிய கூட்டணி ஆதரவு போரை முடிவுக்குக் கொண்டுவரும் திட்டம் ஆகியவை இல்லாமல் போரில் குதித்தார் என்றும் ஜோன் ஹெரி குற்றம் சாட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-யே)

# இந்திய - பாக். கிரிமினல்களின் பட்டியல் பரஸ்பரம் ஒப்படைப்பு

மும்பை தொடர் குண்டுவெடிப்பில் முக்கிய குற்றவாளியான தாவூத்இப்ராகிம் உட்பட இந்தியா தேடிவரும் 25 கிரிமினல்களின் பட்டியலை பாகிஸ்தானிடம் இந்தியா ஒப்படைத்தது.


இந்தியா-பாகிஸ்தானிடயே பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான இரண்டுநாள் மாநாடு இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கடந்த 1993ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற தொடர்குண்டு வெடிப்புகள் தொடர்பாக தேடப்பட்டுவரும் முக்கிய குற்றவாளியான தீவிரவாதி தாவூத்இப்ராகிம் உட்பட இந்தியா தேடிவரும் 25 கிரிமினல் குற்றவாளிகளின் பட்டியலை பாகிஸ்தானிடம் இந்தியா ஒப்படைத்தது.


பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் இக் குற்றவாளிகள் பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடிவிட்டனர். இவர்களது பெயர்கள் அடக்கிய பட்டியலை பாகிஸ்தானிடம் வழங்கிய இந்தியா, இந்தக் குற்றவாளிகளை கைது செய்து இந்தியாவுக்கு அனுப்பிவைக்குமாறு பாகிஸ்தானை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியா அளித்த பட்டியல் குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கும் போது, "இந்தியா தேடிவரும் தாவூத்இப்ராகிம் உட்பட எந்த ஒரு கிரிமினல் குற்றவாளியும் பாகிஸ்தானில் இல்லை" என்று தெரிவித்தனர்.கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியப் பாராளுமன்றம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பிறகு லஸ்கரி-இ-தொய்பா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ்சயீத்,ஜெய்ஸ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மவுலானமசூத் ஆசார் ஆகியோரை நாடு கடத்துமாறு பாகிஸ்தானுக்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது பாகிஸ்தானில் உள்ள லஸ்கரி-இ-தொய்பா தலைவர் ஹபீஸ்சயீத், ஜெய்ஸ்-இ-முகமது அமைப்பின தலைவர் மவுலானா மசூத் ஆசார் ஆகியோரது பெயர்கள் இந்தியா அளித்த பட்டியலில் இடம் பெற்றுள்ளதா இல்லையா? என்பது தெரியவில்லை.ஆனால், வெளிநாட்டு விசாரணைக்காக பாகிஸ்தான் நாட்டினரை இந்தியாவிடம் ஒப்படைக்கமாட்டோம். இந்தியா ஆதாரம் அளித்தால் நாங்கள் விசாரணை நடத்துவோம் என்று பாகிஸ்தான் கூறி உள்ளது. இதேவேளை பாகிஸ்தானும் தம்மால் தேடப்பட்டுவரும் 53 குற்றவாளிகள் பட்டியலை இந்தியாவிடம் வழங்கி உளளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)









கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழாவில் மாணவன் செல்வன் தே. விதுஷன் பாடுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்

# அல்-கெய்டாவால் ஆபத்து; உயர் அதிகாரிகளே கவனம்!

## அமெ. மத்திய புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை


(வாஷிங்டன்)

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உயர் அதிகாரிகளையும் கொல்லுவதற்கு அல்- கெய்டா தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க மத்திய புலனாய்வுப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாஷிங்கடன் அல்லது வேறு நகரங்களுக்கு பயணம் செய்யும் போதே இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உயர் அதிகாரிகளையும் கொல்ல அல்- கெய்டா தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாகவும்,

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உயர் அதிகாரிகளும் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் மத்திய புலனாய்வு பிரிவு மேலம் அறிவுறுத்தியுள்ள்து.

அத்துடன் நியூயோர்க், வாஷிங்டன், நோவோர்க் ஆகிய இடங்களில் உள்ள நிதி நிறுவனங் கள் மீதும் முக்கிய கட்டங்கள் மீதும் அல்- கெய்டா தீவிரவா திகள் தாக்குதல் நடத்தலாம் எனவும் புலனாய்வு பிரிவு எச்சரித்துள் ளது. (உ-ப)



பரேசில் நாட்டில் நிட்டியோய் பகுதியில் திமிங்கலம் ஒன்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன் கரை ஒதுங்கியது. இதை உயிரோடு மீண்டும் கடலில் கொண்டுவிட, கடல் ஆராய்ச்சியாளர்கள் முயன்றனர். பல்வேறு சாதனங்களைக் கொண்டு 58 மணிநேரம் போராடி கடலுக்குள் திமிங்கலத்தை கொண்டு செல்ல முயன்றனர். ஆனால், கடைசியில் இந்த திமிங்கலம் உயிரை விட்டு விட்டது.

## பாக்-இந்திய நல்லுறவின் வெளிப்பாடாக

# 449 இந்தியக் கைதிகளை விடுவிக்க பாகிஸ்தான் அரசு இணக்கம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 449 இந்தியச் சிறைக் கைதிகளை விரைவில் விடுவிக்க இருப்பதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

இந்திய- பாகிஸ்தான் இடையே சமீபகாலமாக சமாதாகப் பேச்சுவார்த்தையும், நல்லுறவை வலுப்படுத்தும முயச்சிகளும தொடர்ந்தும் நடத்துவருகின்றன.

இருநாடுகளிடையேயான பரஸ்பர உறவுகளை வலுப்படுத்தும் விதமாகவும் தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுக்கும் விதமாகவும், சமீபத்தில் 2 நாட்களாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சரான பைசல் சலேஹயத்தைச் சந்தித்து இந்திய உள்துறை செயலாளர் திரேந்திராசிங் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் விளைவாகவும், தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதமாகவும், பாகிஸ்தான் அரசு தங்கள் நாட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் 449 இந்தியச் சிறைக் கைதிகளை விரைவில் விடுவிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த 449 சிறைக் கைதிகளில் மீனவர்கள், போலி விசாவில் சிக்கியவர்கள் மற்றும் பாகிஸ்தானுக்கு சென்று கொலை, கொள்ளை, மற்றும் கடந்தல் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் ஆகியோர் அடங்குவர்.

இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளவர்களில் போலி பாஸ்போர்ட் மற்றும் விசா போன்ற வைகளால் கைது செய்யப்பட்ட 41பேரும்.

பாகிஸ்தான் கடற் பகுதியில் நுழைந்து மீன்பிடிக்கும் போது கைது செய்யப்பட்டு, கராச்சியில் சிறை வைக்கப்பட்டிருக்கும் 408 மீனவர்களும் இதில் அடங்குபவர் என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-ப)

WORLD NEWS
உலக தரிசனம்

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 13



இத்திருக்கோயிலின் முன் சரவணப்பொய்கை பழுது பட்டுக் கிடந்தது. நகரசபையர்கள் அதைத் தூர்த்துவிட முயன்றார்கள். நான் அதைத்தடுத்து நிறுத்தி சரவணப் பொய்கைத் திருப்பணியை மேற் கொண்டேன். இத்திருப்பணிக்கு நண்பர் சிவாஜி கணேசன் 5000 ரூபாய் வழங்கினார். போன் மூலமாகச் சொல்ல கவிஞர் கண்ணதாசன் 5000ரூ. வழங்கினார். அன்பர் திரு எஸ்.ஜி. ரத்தினம் ஐயர் அவர்கள் தொடர் விரிவுரை அமைத்து வசூல் செய்து ரூபாய் 40,000 வழங்கினார். இந்தச் சரவணப் பொய்கை பூர்த்தி பெற ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் ஆயிற்று. இந்தச் சரவணப் பொய்கையில் முருகப் பெருமானுடைய தெப்பவிழா மின் விளக்க அலங்காரத்துடன் வெகுசிறப்பாக நடை பெற்றது.

இந்தக் குயப்பேட்டை ஷண்முக ஞானபுரம் முருகப் பெருமான் மீது பாம்பன் சுவாமிகள் திருப்பதிகம் பாடியிருக்கிறார்கள்.இந்த முருகன் வரதமான முருகன்.

### மோகனூர் திருப்பணி

1940-ல் மோகனூரில் விரிவுரை செய்ய என்னை அழைத்தார்கள்.மோகனூர் என்பது காவிரிக்கு வட கரையில் விளங்குகின்ற சிறந்த திருத்தலம். இந்த ஊர் வாகீச கலாநிதி சிவம் பெருக்கும் சீலர் திரு கி.வா.. ஜகந்நாத ஐயர் அவர்கள் அவதரித்த புண்ணிய நகரமாகும். இந்த ஊரில் சிவாலயம் சிறப்புடையது. இதன் அருகில் காந்தமலை என்ற சிறிய குன்றில் கந்தப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இந்த முருகப்பெருமான் மீது“கி.வா.ஜ.” அவர்களுக்குத் தணியாத காதல் உண்டு. சென்னையிலுள்ள அவர் இல்லத்திற்குக் “காந்த மலை” என்று பெயரிட்டிருக்கிறார்.

இங்கு காந்த மலை அடிவாரத்தில் அருணகிரிநாதர் அறச்சாலை என்ற ஒரு திருப்பணி செய்தேன். இதற்காக மாதந்தோறும் மோகனூருக்குச் சென்று விரிவுரை செய்தும்,அருகிலுள்ள ஊர்களுக்குச் சென்று வசூல் செய்தும் ஒருலட்ச ரூபாய் செலவில் இந்த அறச்சாலை நிறுவப் பெற்றது.என்னுடைய தந்தையார் வந்து திறப்புவிழா செய்தார். இதில் காஞ்சி காமகோடி மகாசன்னிதானம் அவர்கள் தங்கி சந்த்ர மௌளீச்வரர் வழிபாடு செய்தார்கள்.இதில்சேர்ந்தாற்போல் 6,7 திருமணங்கள் செய்யலாம். புரோகிதர்,மேளம்,பூமாலை உட்பட ஒரு திருமணத்திற்கு 11 ரூபாய் தான் கட்டணம். காவேரி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு கரையில் ஒதுங்கிய ஒரு பெரிய மரம் கட்டிட வேலைக்கு ஒரு பகுதிக்கு உதவியது. இத்திருப்பணி செய்யும்பொழுது ஒருமூட்டை சிமிட்டி 15 அணாதான். அக்காலத்தில் 1 லட்ச ரூபாய் என்றால் இக் காலத்தில் பல லட்சமாகும்.

காந்தமலை கோயிலிலுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் வெள்ளிக் கவசம் செய்து அணிவிக்கப் பெற்றது.இங்கு ஆனி மூலம் பௌர்ணமி கூடிய நன்னாளில் அருணகிரிநாதர் ஆராதனை விழா வெகு சிறப்பாக நடைபெறும்.இத்திருப்பணியில் முக்கியமான பங்கு பெற்றவர் திரு ஆர்.பழநியப்ப முதலியார்.

### வடலூர் திருப்பணி

1936-ல் வயலூர் கோயில் மகாகும்பாபிஷேக விழா நடைபெற்றது.ஹிந்து பத்திரிகையில் வயலூர் என்பதை வடலூர் திருப்பணி என்று தவறாக வெளியிட்டு விட்டார்கள். இதனைப் பார்த்த திருச்சிராப்பள்ளி எனது ஆப்த நண்பர், முனிசிபல் மனேஜர் திரு வி.எஸ். லோகநாதப்பிள்ளை அவர்கள் “ஐயா! வடலூர் திருப்பணியை நீங்கள தான் செய்யப் போகின்றீகள்” என்று என்னைப் பார்த்துக் கூறினார். நான் வடலூர் திருப்பணியைப் பற்றிச் சிந்திக்காத காலம்.“அது நம்மால் ஆகக்கூடிய காரியமா?”என்று கேட்டேன்.

வடலூரில் வள்ளலார் மூன்று நிறுவனங்கள் அமைத்தார்கள்.உடம்பு தழைக்க சத்திய தருமச்சாலையும்,உணர்வு தழைக்க சத்திய வேத பாடசாலையும்,உயிர் தழைக்க சத்திய ஞான சபையும் நிறுவினார்கள். இவற்றுள் சத்தியஞான சபை பழுதடைந்து விட்டது.

பாலாலயம் செய்து பல ஆண்டுகளாக யாரும் திருப்பணியை மேற்கொள்ளாமல் சத்திய ஞானசபை பழுதுற்றுக் கிடந்தது.பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகள் மற்றும் பலர் முயன்றும் திருப்பணி நடைபெறவில்லை.கடலூர்ஜில்லாபோர்டு தலைவர் திரு கே.சீதாராம ரெட்டியார் அவர்களின் தலைமையில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப் பெற்றது. இடையில் அமாவாசைப் பரதேசி அவர்கள்“நான் திருப்பணிசெய்வேன்” என்று சிறிது வசூல் செய்து செப்புத் தகடுகள் வாங்கி ஒரு சிறிது பணிசெய்யத் தொடங்கினார். திருப்பணிக் குழுவினரிடம் வசூல் செய்த கணக்குத்தர மறுத்தார். அதனால் அத்துடன் அது நின்றுவிட்டது.

அப்பொழுது திருச்சியிலிருந்து மதுரைக்கு மாறுதலாகி மதுரையில் முனிசிபல் மனேஜராகப் பணிபுரிந்த லோகநாதப்பிள்ளை அவர்கள் வடலூர் வள்ளலாரிடம் அளவு கடந்த அன்பு பு,ண்டவர். அவர் என்னைப் பார்த்து “ஐயா! வடலூரில் திருப்பணி தொடங்கியிருக்கிறார்கள்.நாம் ஏதாவது அதில் ஈடுபடவேண்டும்”என்று கூறி,மதுரையில் ஞாயிறு தோறும் நானும்,அவரும் வசூல் செய்தோம். திருப்பணிக்குப் பணம் கொடுத்து வாருங்கள் என்று என்னை வடலூருக்கு அனுப்பினார். 700ரூபாய் எடுத்துக்கொண்டு வடலூருக்குச் சென்றேன்.அங்கு சத்தியஞான சபையைப் பூசனை செய்யும் சிவஸ்ரீ பாலசுப்பிரமண்ய சிவாச்சாரியாரைக் கண்டு அவரிடம் தங்கினேன். பின்னலூர் வாகீசம் பிள்ளை அவர்களின் தந்தையார் திரு கணபதிப்பிள்ளையும் அங்கு வந்திருந்தார். நான் சிவாச்சாரியாரைப் பார்த்து“திருப்பணிக்குப் பணம் கொண்டு வந்திருக்கிறேன்” என்று சொன்னேன். குருக்கள “யாரும் இங்கு பொறுப்பாக இருந்து திருப்பணி செய்வாரில்லை. கணபதிப்பிள்ளை என்ற இவர் சிறந்த அறப்பெருஞ் செல்வர். உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் இவரிடம் பணம் கொடுத்து விட்டுப் போங்கள்” என்று கூறினார்.

நான் அதுபடியே கணபதிப்பிள்ளையிடம் ரூபாய்700 கொடுத்துவிட்டு மதுரைக்குச் சென்றேன். இவ்வாறு மாதந்தோறும்700,800என்று எடுத்துக்கொண்டுபோய் பால சுப்பிரமண்ய சிவாச்சாரியாரிடம் கொடுத்துவந்தேன்.

அவருடைய மேற்பார்வையில் 3000 ரூபாய் அளவில் ஜோதி மேடைக்குத் தூண்கள் செய்யப்பட்டன. மதுரையிலிருந்து முனிசிபல் மனேஜர் ஒரு இன்ஜினீயரை அனுப்பித் திருப்பணியைப் பார்வையிடச் செய்தார்.அந்த இன்ஜினீயர் வந்து பார்த்து செய்த தூண்பாரம் தாங்காது எனக்கூறிவிட்டார்.அதனால் செய்தவேலைகள் வீணாகிவிட்டன. அப்பொழுது சிதம்பரத்தில் திருப்பணிக் குழுவினர்கள் ஒருகூட்டம் போட்டு நடாத்தினார்கள். அதற்கு என்னையும் அழைத்திருந்தார்கள்.நான் அந்தக் கூட்டத்தில் திருப்பணிக் குழுத் தலைவரைப் பார்த்து “திருப்பணியைப் பொறுப்பாகப் பார்க்க ஒருவரை நியமிக்க வேண்டும். இப்பொழுது செய்த வேலை கள் வீணாகிவிட்டன” என்று கூறினேன்.

(தொடரும்)





. அமரர் குமார் பொன்னம்பலத்தின் பிறந்த தின விழா நேற்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படம்: அலுவலக நிருபர்.

குவைத் செல்லும் இலங்கைப்

# பெண்களின் பாதுகாப்புக்கு தூதுவர் உத்தரவாதம்

(கொழும்பு)

வேலை வாய்ப்புத் தேடி குவைத்துக்குச் செல்லும் இலங்கைப் பணிப் பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள் மற்றும் சித்திரவதைகள் இனிமேலும் இடம்பெறாத வண்ணம் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக இலங்கைக்கான குவைத் தூதுவர் அப்துல்லா அல் சனூஷி உறுதியளித்துள்ளார்.

வேலைவாய்ப்புக்காக அங்கு செல்லும் இலங்கைப் பணிப் பெணகள் மீது மேற் கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் கடவுச் சீட்டுப் பிரச்சினை போன்ற காரணங்களால்,பணிபுரியும் இடங்களிலிருந்து இலங்கைத் தூதரகத்திற்குச் சென்று அவர்கள் தஞ்சம் கோருகின்றனர். இவ்வாறான பெண்களின் நிலைமை குறித்து விசாரணை நடாத்தி உரிய சட்ட நடவடிக்கை எடுகக்கப்படவுள்ளது.

குவைத்தில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண்களைச் சாியான முறையில் பராமாித்து பூரண தொழில் உரிமையுடன், பாதுகாப்பையும் வழங்குவதற்கு குவைத் அரசாங்கம் தற்போ[து] துரித முன்னேற் பாட்டு ந[ட]வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என குவைத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-ற)

விவாத அரங்கு -4

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த (சா/த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் - குறள்

வலம்புரி

## குமார் ரூபசிங்கவின் யதார்த்தமான கருத்து

இனப்பிரச்சினை விடயத்தில் யதார்த்தபூர்வமாகச் சிந்திக்கின்ற சிங்கள மக்கள் பலர் இருக்கவே செய்கின்றனர். தமிழர்களின் உரிமைப் பிரச்சினை நியாயபூர்வமாகத் தீர்க்கப்படவேண்டும். இலங்கைத் தீவில் சிங்களவர்களுக்கு இருக்கின்ற அதே உரிமைகளும், சலுகைகளும் தமிழ்மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையை உடைய சிங்கள மக்களில் குமார் ரூபசிங்கவும் ஒருவர்.

அரசியல் புலத்தில் ஆழமான சிந்தனையோட்டமுடைய குமார் ரூபசிங்கவின் எதிர்வுகூறல்கள் பல நடைமுறையில் நிருபிக்கப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் சென்ற தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்த குமார் ரூபசிங்க, ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்க ஜனாதிபதி எடுத்த முயற்சிகளை வன்மையாகக் கண்டித்திருந்தார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை சமாதானத்தைப் பாதிக்கும் - தடைப்படவைக்கும் என்ற அவரின் கருத்து இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சிங்கள பௌத்தம் என்ற குறுகிய சிந்தனையைக் கடந்து இலங்கைத் தேசம், இலங்கை மக்கள் என்ற பன்முகப் பார்வையில் சமாதானத்தை விரும்பும் குமார் ரூபசிங்க, ஓர் முக்கியமான விடயத்தை நேற்று முன்தினம் வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது, விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அதிகாரசபை யோசனையின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே அவர் முன்வைத்த கருத்தாகும்.

யதார்த்தமான ஒரு கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கும் குமார் ரூபசிங்க அதனை வெறும் பத்திரிகைச் செய்தியாக மட்டுமன்றி, அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவிடமும் தெளிவுபட எடுத்துக்கூறியுள்ளார்.

தனது கருத்து நியாயமானது என்பதற்குச் சான்றாக எழுபது வீதமான மக்கள் சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இருபது வீத மக்கள் தமது கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஆக பத்து வீதமான மக்களே சமஷ்டிக்கு எதிரான கருத்துக்களை கொண்டுள்ளனர் என்ற புள்ளிவிபர ரீதியான உண்மைகளையும் முன்வைத்துள்ளார்.

தென்னிலங்கைப் பொது அமைப்புக்களின் தலைவராக இருக்கின்ற குமார் ரூபசிங்க முன்வைத்த கருத்தானது யதார்த்தமானது மட்டுமல்ல,. இலங்கையில் மீண்டுமோர் யுத்தம் வெடிப்பதைத் தவிர்க்கும் ஆலோசனையும் கூட.

தென்னிலங்கைப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்த குமார் ரூபசிங்க உண்மை நிலைகளை விடுதலைப் புலிகளின் உணர்வுகளை மிகத் தெளிவாக அவரிடம் எடுத்துக்கூறியிருந்தார்.

இதில் முக்கியமான விடயமே விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபிலிருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கருத்தாகும்.

அவரினால் முன்வைக்கப்பட்ட யதார்த்தபூர்வமான கருத்தை ஆட்சியாளர்கள் ஊதாசீனம் செய்வார்கள் ஆயின் அதன் விளைவு மிகப் பாரதூரமாக அமையும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்கமுடியாது.

எழுபது வீதமான மக்கள் சமஷ்டித் தீர்வை ஆதரிக்கும்போது வெறும் பத்துவீதமான மக்களின் எதிர்ப்பிற்கு அரசு முதன்மையளிக்குமாயின் முடிவு மீண்டும் ஓர் யுத்தமாகவே இருக்கும்.

எனவே சிங்கள ஆட்சியாளர்கள் எவராயிருந்தாலும் அவர்கள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென உளப்பூர்வமாக விரும்புவார்களாயின் அதற்கு ஒரேவழி சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிப்பது - அதனை விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபிலிருந்து ஆரம்பிப்பதாகும்.

இதனைச் சுருங்கக்கூறின் குமார் ரூபசிங்க முன்வைத்த கருத்தை நடைமுறைப்படுத்துவதே சமாதானத்தை அடையும் வழியாகும்.

# பல்கலை சபா மண்டபத்தில் இருந்து ஜனாதிபதியின் படத்தை அகற்றுக !

## மாணவர் ஒன்றியம் துணைவேந்தருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

எமது மக்களின் மீது பல்வேறுபட்ட அடக்குமுறைகளைத் திணித்த, திணிக்க முற்பட்டுக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உருவப்படத்தினை பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக அகற்ற வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தருக்கு 11ஆம் திகதியிட்டு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும்,

எமது தமிழினம் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கும் சந்திரிகா, எம் மீது மீண்டும் ஓர் யுத்தத்தைத் திணித்து எமது இனத்தை அழிக்க முற்பட்டுக்கொண்டிருக்கின்றார் என்பது யாவரும் அறிந்த உண்மை.

சமாதானம் என்ற போர்வையில் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் ஒப்பந்தங்களை செய்து இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்திக்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தினை தமிழ் மக்கள் மீது திணிக்க முற்படுகின்றார்.

எமது இனத்தின் மீது அக்கறையில்லாத, எமது இனத்தினை அழிக்கவேண்டும் என்ற இனவெறியோடு ஆட்சிப் பீடததில் இருக்கும் சந்திரிகாவின் உருவப்படம் எமது பல்கலைக்கழகத்தில் இருப்பதற்கு எந்தத் தகுதியும் அற்றது. 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை எமது மண்ணும் மக்களும் பட்ட துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணமானவரும் சந்திரிகாவேதான்.

எமது பல்கலைக்கழகம் எமது மக்களுக்காகவும், மக்களின் விடுதலைக்காகவும் குரல்கொடுத்துக்கொண்டிருக்கின்ற சிங்கள இனவெறி அரசுக்கு அடிபணியாத உயர் கல்வி நிறுவனம். எனவே, இவ்வாறான ஒரு இடத்தில் எம மண்ணை அழித்த அரக்கத்தனமானவர்களின் படத்தினை வைத்து பூசித்துக்கொண்டிருக்க நாம் தயாராக இல்லை.

பாடசாலைச் சீருடைகளுடன் நாம் பள்ளியில் படித்த போது எமது உறவுகள் பலரின் உயிர்களை சீருடையோடு பறித்துச் சென்ற இவ் அம்மையாரின் படத்தினை எம்மால் பார்த்துக்கொண்டு தொடர்ந்தும் கல்வி கற்கமுடியவில்லை. எனவே, உடனடியாக சந்திரிகாவின் படத்தினை அகற்றி விடுமாறு தங்களிடம் கோரிநிற்கின்றோம் என்றுள்ளது.(உ)

## பால்மா விலை அதிகரிக்கும்?

(கொழும்பு)

பணணை உற்பததியாளர்களிடம் இருந்து கூடுதலான விலையில் பாலைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் ஒரு லீற்றா பாலை 16 ரூபாவிற்கு கொள்வனவு செய்து வந்த அரசாங்கம் எதிர்காலத்தில் ஒரு லீற்றா் பாலை 20 ரூபாவிற்கு கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பாலை அரசு கூடுதலான விலையில் கொள்வனவு செய்தால், பால்மாவின் விலையும அதிகரிக்கும் என வர்ததக நுகர்வோா விவகார அமைச்சா் தெரிவித்துள்ளார். (உ-க,60)

## குமாரின் பிறந்ததினம்

(திருநெல்வேலி)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66வது பிறந்த தின நிகழ்வு நேற்றுக் காலை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் கட்சி உறுப்பினர் இ.ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஆசிரியர் இளங்கோ ஆகியோர் உட்பட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (உ-ற,43)

## அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது அந்திரெக்ஸா?

### சோதனை செய்ய நடவடிக்கை

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்து தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் அடெம் ஈரெய்லி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தூதரகத்தை தற்காலிகமாக மூடியுள்ளதாக வாஷிங்டனில் வைத்து சர்வதேச ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தார். சந்தேகத்திற்குரிய துகள்களுடன் கடிதம் ஒன்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு கிடைத்துள்ளது.

அத்துகள்கள் அந்திரெக்ஸ் துகள்களாக இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

அமெரிக்கத் தூதரகத்தை அடுத்துள்ள கட்டடத்தில் இயங்கும் அமெரிக்க உதவி நிறுவனம், நூலகம், கலாசார நிலையம் என்பனவும் மூடப்பட்டுள்ளன் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தேகத்துக்குரிய துகள்கள் குறித்து பரிசோதனை நடத்துமாறு அரசாங்கத்தின் பிரதி இரசாயன பகுப்பாய்வாளரை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆயினும், இந்தத் துகள்கள் குறிதது பரிசோதனை நடத்துவதற்குரிய வசதிகள் தங்களிடம் இல்லை என பிரதி இரசாயன பகுப்பாய்வாளர் டபிள் யு.டி.எம்குணரட்ன தெரிவித்துள்ளதாகக் கூறபபடுகிறது. (ச)

## வற் வரியை நீக்கினால் எரிபொருள் விலைகுறையும்

### அமைச்சர் ஜெயராஜ் ஆலோசனை

எரிபொருட்கள் மீதான வற்வரியை நீக்கினால் எரிபொருடகளின் விலையைக் குறைக்கமுடியுமென வர்த்தக பாவனையாளர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்புக் குறித்து ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில், எரிபொருட்கள் மீதான வற் வரியை அரசு நீக்குமானால் எரிபொருட்களின் விலையைக் குறைக்க முடியும்.

அவ்வாறு வற்வரியை நீக்கும்போது ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யவேண்டுமானால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மீது மேலதிக வரியொன்றை விதிக்கலாம் என அரசுக்குத் தான் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-க,60)

## பழி ஓரிடம் பாவம் வேறிடம்

(யாழ்ப்பாணம்)

உயிருடன் இருக்கும் நபர் ஒருவரைக் கொலை செய்ததாகக் கூறிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை விடுவிப்பதற்கான முயற்சிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த பொ. செல்வராசா எனபவரது மனைவியை அதே இடததைச் சேர்ந்த இ.தங்கவேல் என்பவர் இரண்டாம் தாரமாக மணம் முடித்துக் கொண்டார்.

இதனால் வெறுப்படைந்த செல்வராசா தனது ஊரில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணம் அராலியில் பிறிதொரு பெண்ணை மணம் முடித்து அங்கு வசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்து கொள்ளாத செல்வராசாவின முதல் மனைவியினது இரு பிள்ளைகளும் தங்கவேல் என்பவர் தமது தந்தையைக் கொன்றுவிட்டதாகத் தெரிவித்து திருகோணமலை குசசவெளிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, கொலைக் குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தங்கவேல் நீதிமன்றத்தின் உத்தரவின பேரில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதனை அறிந்த தங்கவேலினது இரண்டாம் தார மனைவியும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்.

கொலை செய்யாத போதும் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கவேலினை சிறை மீட்பதற்காக யாழ்ப்பாணம் அராலியில் வாழ்ந்து வரும் செல்வராஜாவைக் கண்டுபிடித்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கோரி தங்கவேலின் சகோதரி நேற்று முன் தினம் செய்த முறைப்பாட்டையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (உ.ப,19)

## அமெ.அதிகாரிகள் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

அமெரிக்காவில் கண்ணிவெடி அகற்றும் குழுவின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் வவுனியா அரச அதிபர், வன்னி இராணுவத் தளபதி, வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆறு கண்ணிவெடி அகற்றும் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனா.

இதன் பின்னா் குடாகச்சக்கொடி பிரதேசத்திற்கு சென்று நிலைமைகளினை ஆராய்ந்தனா. இவாகள் வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் உள்ள பிரச்சினைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள் தொடா்பாகவும் ஆராய்ந்தனா . (ச)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**கணணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்? இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.**

**சுவாமி விவேகானந்தர்**

### தற்கொலைதாரிக்கு அடையாள அட்டை வழங்கிய

# ஆணையாளரைக் கைதுசெய்ய இடைக்கால தடை உத்தரவு

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் விஜயரணசிங்கவைக் கைதுசெய்வதற்கான இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று குற்றத்தடுப்பு பிரிவுக்குப் பிறப்பித்திருக்கின்றது.

விஜயரணசிங்க தாக்கல் செய்த முன்பிணை மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் உயிரிழந்த பெண் உட்பட அதனுடன் தொடர்புபட்ட வேறு சிலருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கியமை தொடர்பாக விஜயரணசிங்க குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்தார்.

இந் நிலையில் ரணசிங்கவினால் முன்பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குற்றத் தடுப்புபிரிவுத் திணைக்களத்தின் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களை தடுக்கும் அதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதிவாதிகள் தமது தரப்பு நியாயங்களை எதிர்வரும் 25ம் திகதி மன்றில் சமர்பிக்கவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. (த-08)

# வட- கிழக்கு படுகொலைகள்; அரசாங்கம் ஆழ்ந்த கவலை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் அரசியல் படுகொலைகள் குறித்து அரசாங்கம் ஆழ்ந்த கவலை தெரிவிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களை அரசு வன்மையாகக் கண்டிப்பதுடன் அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

அத்துடன், இத்தகைய படுகொலைகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுவதாக அமைந்திருக்கும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவைதவிர, வன்னியிலிருந்து திருகோணமலையின் சம்பூர் பகுதிக்கு தமது உறுப்பினர்கள் செல்ல அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அத்துடன், திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகள் இருப்பதாக பாதுகாப்பு படையதிகாரிகள் கூறிவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு ஆரம்பித்துள்ளது.

எது எவ்வாறாயினும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஒருபோதும் கைவிடாது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று சுங்கத் தீர்வையற்ற விதத்தில் வாகனங்களைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-க,60)

# மின்கட்டணத்தை அதிகரிக்கத்திட்டம்

(கொழும்பு)

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகவேண்டி, மின்கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆலோசனையை மின்சார சபை ஏற்கனவே அரசாங்கத்திடம் முன் வைத்திருப்பதாக அதன் தலைவர் ஆனந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டிருப்பதால் மின்சார சபைக்கும் மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்விநியோகம் செய்வதில் பாரிய நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், இந் நஷ்டத்தை ஈடுசெய்யும் விதமாக இக் கட்டண அதிகரிப்பு ஆலோசனை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் மின்சார சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாவனையாளர்களைப் பாதிக்காத விதத்தில் இதற்கு மாற்று யோசனைகளும் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-ப)

# நடுவானில் ரகளை புரிந்த விமானப் பயணிகள் கைது

(கொழும்பு)

சென்னையில் இருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த விமானத்தில் நடுவானில் வைத்து பதற்றத்தை ஏற்படுத்திய 3 பயணிகளை கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸார் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளார்கள்.

சென்னையில் இருந்து கொழும்புக்கு புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் பயணஞ் செய்த 2 இந்தியப் பயணிகளும், ஒரு இலங்கையரும் நடுவானில் விமானம் பறந்துகொண்டிருந்த சமயம் இருக்கையைவிட்டு எழுந்து நின்று இயல்புக்கு மாறாக நடந்து பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இம் மூன்று பயணிகளும் அதிக போதையில் இருந்ததாக விமான நிலையப் பொறுப்பதிகாரிகள் கூறியுள்ளார்கள். (உ-க,64)

# தாதியர்சேவையில் மேலும் 5 ஆயிரம் பேர் இணைப்பு

நாட்டிலுள்ள வைத்திய நிலையங்களில் நிலவும் தாதியர் பற்றாக்குறையால் மக்களுக்கான மருத்துவ சேவையில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை கவனத்தில் கொண்டு 5000 பேரை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட ஆலோசனையின் பேரிலேயே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன

இதைவிட நாட்டிலுள்ள ஆதார மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சைக்கான வசதிகள் செய்துகொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (உ,ப)

## ஞாயிற்றுக்...

படல்வேண்டும் எனக்கோரி கலாசார, தேசிய சொத்துக்கள் விவகார அமைச்சர் விஜித ஹேரத்தினால் அமைச்சரவையில் முன் வைக்கப்பட்ட பிரேரணைக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி கிடைத்ததன் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கான தடைச்சட்டம் மிகவிரைவில் அமுலுக்கு வரவுளளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ப)

## அதாவுல்ல...

வினை எடுத்துள்ளதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதாவுல்லாவுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்திருக்கும் அமீர் அலிக்கு அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய உயர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கூட்டமைப்பு...

✦ நெடுந்தீவு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளமபரிதி, துணைப் பொறுப்பாளர் செம்மணன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், ஈழவேநதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுத தலைவராக மாவை சேனாதிராஜாவை நியமிப்பது என முடிவுசெய்யப்பட்டது. (ச-05,43)

## கருணா...

குறிப்பிடத்தக்கது.

விசாரணை நடைபெற்ற தினத்தன்று இவர்கள் இருவரும் இரகசியமாக அழைத்துவரப்பட்டதுடன், நீதிமன்றில் உட்பிரவேசிக்கும் அனைவரும் கடும் உடற்சோதனையின் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ)

## கனடாத் தூதுவர் - டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள கனடாவிற்கான தூதுவர் வலரி ரேமன்ட் மற்றும் உதவித் தூதுவர் ஆகியோர் நேற்று முன்தினம் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாக எடுத்துரைத்த அமைச்சர்,

தொடர்ந்துகொண்டிருககும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கினார்.

இச்சந்திப்பின்போது ஆலோசகர் கே.விக்னேஸ்வரன் மற்றும் எஸ்.தேவராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ)

# சிறுமிமீது பாலியல் பலாத்காரம் மேல்மாகாணசபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

சிறுமி ஒருத்தியைப் பாலியல் பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர் திமிந்த சில்வா சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட அவரை எதிர்வரும் 23ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் சரோஜினி வீரவர்த்தனா உத்தரவிட்டுள்ளார்.

திமிந்த சில்வா சார்பில் ஆஜரான சட்டத்தரணி அவரை பிணையில் விடுவிக்குமாறு கோரினார். எனினும் அக் கோரிக்கையை நீதிவான் நிராகரித்தார்.

சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் உறுதிப்படுத்துவதனால் பிணை வழங்கும் கோரிக்கையை ஏற்கமுடியாது என நீதிபதி தெரிவித்துள்ளார். (த-8)

# புலிகளின் தலைவர் பிரபாவுடன்...

சினை தொடர்பான தீர்வு விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரடியாகப் பேசவேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னரே நான் எண்ணியிருந்தேன். ஆனால், அதற்குரிய சந்தர்ப்பம் எனக்கு இன்றுவரை கிடைக்கவில்லை. இன்றுள்ள சூழ்நிலையில் இப்படியானதொரு சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் நான் நம்பவில்லை.

எனினும் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதனை இனப்பிரச்சினைத் தீர்வுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகவே நான் கருதுகின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசுவதற்கு நான் தயாராகவுள்ளேன். இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசும் போது நிதி மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக பிரச்சினைகளே முக்கியமானதாக இருக்கும். இது சம்பந்தமான எனது நிலைப்பாடு குறித்து ஏற்கனவே நோர்வே அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது, சர்வதேச கடல்வளம்- சர்வதேச மயப்பட்டிருப்பதனால் சர்வதேசக் கடற்பரப்பில் இருக்கின்ற சில விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவேண்டியுள்ளது.

இதில் முக்கியமாக இலங்கைக்கு வருகின்ற கப்பல்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கடற்பரப்பின் ஊடாக எவ்வாறு கொண்டு வருவது தொடர்பாக முக்கியமாக ஆராயப்படவேண்டியுள்ளது.

இத்தகைய சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

இத்தகைய பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்காகவே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளேன்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் அவர்களது நிலையிலிருந்து கொள்கை ரீதியாகப் பார்க்கும் போது அவர்களது நிலைப்பாடு சரியாகவே உள்ளது. ஆனால், இன்று நாட்டுக்குத் தேவையாக இருப்பது சமாதானமே.

இதற்காக உடனடியாகவே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியுள்ளது.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதை எவராலும் தடுத்துநிறுத்தமுடியாது.

இத்தகையதொரு கட்டத்தில் எதனையும் விட்டுக்கொடுப்பதற்கு நான் தயாரில்லை. இதனடிப்படையிலேயே உடனடியாகவே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தயாராகவுள்ளேன். இப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நோர்வே போன்ற இடைத்தரகர்களின்றி நேரடியாகப் பேச விரும்புகிறேன்.

ஆனால், அது நடைபெறக்கூடிய சாத்தியம் தற்போது இல்லையென்று தெரிவித்த ஜனாதிபதி எப்படியாவது சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து சமாதான முயற்சியைத் தொடர்வதே தனது விருப்பமாகும் என்று கூறினார். (ம-121)


## அழைப்புக் கட்டளை

இல, 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/ மாவட்ட நீதிமன்றத்தில்

ஏபிரகாம் டேவிட் இக்னேசியஸ்
மனைவி லில்லி புஷ்பலீலி
2ம ஒழுங்கை, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
*வழக்காளி*

வழக்கு இல: மணநீக்கம்- 483

*எதிர்*

ஏபிரகாம் டேவிட் இக்னேசியஸ்
மே/பா யேசுரட்ணம்
மாகிறட்
11ம வட்டாரம், புங்குடுதீவு
*எதிராளி*

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்ட வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் 20 ம் திகதி ஏப்பிரல் 2002 ல் பதிவுசெய்த விவாகத்தை இரத்துசெய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**து.சிறீமோகன்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரி ஒன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து. சிறீமோகன்
2004 ஆண்டு ஆவணி மாதம் 11 ஆந் நாளாகிய இன்று. கையொப்பம் பதிவாளர்

(8736)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்காபனக்காரால் இல.15 வெள்ளாங்கெரு. யாழ்ப்பாணம் என்னும் மகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.